விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 348 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 16 ஞாயிற்றுக்கிழமை (01.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



# விடுதலைப் புலிகளை நினைவேந்தியவர்களை அரசு உடனடியாகக் கைது செய்ய வேண்டும்

## சரத் வீரசேகர, உதய கம்மன்பில கூக்குரல்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாளை கொண்டாடியவர்களையும் மாவீரர் நாள் நினைவேந்தலை பொது வெளியிலும் சமூக ஊடகங்களிலும் பிரசுரம் செய்தவர்களையும் கைது செய்யுமாறு அநுர அரசாங்கத்திடம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் ஊடகங் 19

# மாவீரர் நினைவேந்தல் முகநூலில் பிரசாரம்

## 3 இளைஞர்கள் கைது களத்தில் இறங்கிய பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு - கிழக்கில் பெரும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வுகளை ஊக்குவித்து முகப்புத்தகத்தில் பிரசாரம் செய்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று சந்தேகநபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.**


இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர், சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனவும், அவர் நேற்று முன்தினம் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மேலும் கைதான ஏனைய இருவரில் ஒருவர் பத்தேகம பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதோடு, குறித்த சந்தேகநபர் 19

### நவாலி கிழக்கில்

## 250 ஆண்டுகள் பழைமையான அரச மரம் முறிந்து வீழ்ந்தது



19

## குளிருக்காகத் தீ மூட்டியவர் தீயில் எரிந்து மரணம்

### முல்லைத்தீவில் சம்பவம்

(முல்லைத்தீவு)

குளிருக்காகத் தீ மூட்டியவர் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு சிலாவத்துறையில் நேற்று முன்தினம் வெள்ளிக் 19

## எரிபொருள் விலையில் திருத்தம்

(கொழும்பு)

எரிபொருள் விலைச் சூத்திரத்தின்படி மாதாந்த விலையில் திருத்தம் செய்யப்பட்டுள்ள நிலையில்,

நேற்று நள்ளிரவு 19

## கல்லுண்டாயில் காணிக் கச்சேரி

### யாழ்.மாவட்ட பிரதி அரசாங்க அதிபர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடம் உறுதி

(யாழ்ப்பாணம்)

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தற்காலிகமாக பாதுகாப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை சந்தித்து அவர்களின் குறை நிறைகளைக் கேட்ட



19

### வவுனியாவில்

## விபரீத முடிவெடுத்த பெண் மரணம்


(வவுனியா)

வவுனியாவில் விபரீத முடிவெடுத்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா செட்டிகுளம் பெரியகுளம் பகுதியில் நேற்று முன் 19

## காட்டு யானை தாக்கியதில் கடற்படை அதிகாரி மரணம்

### வவுனியாவில் சம்பவம்



(வவுனியா)

வவுனியாவில் கடற்படை லெப்டினன்ட் தர அதிகாரி ஒருவர் காட்டு யானையின் தாக்குதலால் மரணமடைந்துள்ளதாக பூனாவ பொலிஸார் தெரிவித்தனர்.

பணிநிமித்தமாக கொழும்புக்குச் சென்று விட்டு நேற்று 19

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு கோரப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்ய முடிவு

### கட்சித் தலைவர்களிடையே சமரசம்

(கொழும்பு)

2022ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கோரப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச்செய்ய அனைத்துக் கட்சித் தலைவர்களும் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானித்துள்ளனர்.

வேட்புமனுக்களை இரத்து செய்துவிட்டு புதிய வேட்புமனுக்களை கோர அனைத்து கட்சித் தலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

பாராளுமன்றகட்ட தொகுதியில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, ஏனைய கட்சித் தலைவர்களான சஜித் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31ஆம் நாள் அந்தியேட்டி

வீட்டுக்கிருத்திய அழைப்பும்

நன்றி நவிலலும்



கடந்த 30.10.2024 (புதன்கிழமை) அன்று
சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர் மகேஸ்வரன் சிவயோகம் (மணி அக்கா)**

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் 29.11.2024 வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தை இழந்து நாம் தவித்தவேளை ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும் இணையத்தளங்களினூடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலித்தவர்களுக்கும் இன்னும் சகல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் எம் அன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

அரசங்குளம்,
ஓமந்தை, வவுனியா. 077 751 7285

தகவல்:-
குடும்பத்தினர்


# நெருக்கமானவர்களுக்கு உயர் பதவி அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டு

ஆயுர்வேத திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களின் உயர் பதவிகளுக்குத் தகுதியற்ற மற்றும் தங்களுக்கு நெருக்கமானவர்களை தற்போதைய அரசாங்கம் நியமித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த இலங்கை ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகளின் ஒன்றிணைந்த அமைப்பின் தலைவர் வைத்தியர் விமுக்தி டி சொய்ஸா இதனைத் தெரிவித்துள்ளார்.

தகுதியற்ற மற்றும் தங்களுக்கு நெருக்கமானவர்களை உயர் பதவிகளுக்கு நியமிக்கும் செயற்பாடுகளை தற்போதைய அரசாங்கம் ஆயுர்வேத திணைக்களத்திலிருந்து ஆரம்பித்துள்ளதா? எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இவ்வாறான நியமனங்கள் ஊடாக அரச ஆயுர்வேத சேவை உள்ளடக்கிய அரச சேவையைக் கேள்விக் குறியாக்க வேண்டாம் என அரசாங்கத்திடம் கோருவதாகவும் ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகளின் ஒன்றிணைந்த அமைப்பின் தலைவர் வைத்தியர் விமுக்தி டி சொய்ஸா குறிப்பிட்டுள்ளார். (ம-7)


செம்மொழி கல்வியகம் - தாவடி
(தாவடிப் பாடசாலைக்கு அருகில்)

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான

* அலகு ரீதியிலான
* கடந்தகால
* ஏனைய பயிற்சி

வினாக்களின் தொகுப்பு மீட்டல் வகுப்பு நாளை ஆரம்பமாகவுள்ளது

ஆ.பிருந்தாபன்
077-2550807

(2647)


# இலஞ்சம் பெற்ற பொலிஸார் கைது


நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகரை இலஞ்ச பெற்ற குற்றச்சாட்டில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பான பிரச்சினையை விசாரிப்பதற்கும் நீதிமன்றத்தினால் மோட்டார் வாகனத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு உதவுவதற்கும் குறித்த பொலிஸ் அதிகாரி 270,000 ரூபா பெறுமதியான குளிரூட்டியை இலஞ்சமாக கேட்டமை தொடர்பாகவே கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

# மரண அறிவித்தல்

## திரு.தம்பிப்பிள்ளை பாலசிங்கம்

(ஓய்வுநிலை ஆசிரியர் - யா/இணுவில் மத்திய கல்லூரி)



பிறப்பு 31.05.1937 இறப்பு 30.11.2024

வாதரவத்தை புத்தூரைப் பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட திரு.தம்பிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் நேற்று 30.11.2024 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான தம்பையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வலட்சுமியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் சிவைதினி, ஞானேந்திரன்(ஆசிரியர் - யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கஜேந்திரநாதன்(யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதா வித்தியாலயம்), சத்தியபாமா(யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அழகனின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கண்மணி, கனகமணி, தவமணி மற்றும் பூபதிப்பிள்ளை, சிவநேசம் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, மகாலிங்கம் மற்றும் முத்தையா காலஞ்சென்றவர்களான அண்ணாச்சாமி, சொர்ணலிங்கம், ஞானேஸ்வரி, தங்கலட்சுமி, தியாகராஜா, கமலாதேவி மற்றும் விமலாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, முருகேசு, விஜயலக்சுமி, நடராஜா மற்றும் பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.12.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மஞ்சத்தடி,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
தொ.இல. 077 4210062

(2053)

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 1962 - 07 - 16



இறைவன் அடியில் 2024 - 11 - 26

## திருமதி சிங்கராசா மேரிஅன்னா

பலாலியைப் பிறப்பிடமாகவும் அரியாலை முள்ளிவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிங்கராசா மேரிஅன்னா 26.11.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டானியல் - பிலோமினா தம்பதியரின் அன்பு மகளும் கதிர்காமர் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சிங்கராசா அவர்களின் அன்பு மனைவியும் போல்ராஜ்(பிரான்ஸ்), கபில்ராஜ்(மலேசியா), நெவில்ராஜ், யோயல்ராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயதர்சினியின்(பிரான்ஸ்) அன்பு மாமியாரும் அன்ரன் ஜெயக்குமார், புனிதராஜ், அமல்ராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிலேமின் சாரா, பிறிஷா ஹக்ஹா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை 02.12.2024 திங்கட்கிழமை பிற்பகல் 03.30 மணியளவில் புனித யூதாததேயு ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 5000 789

(2642)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் நாளுக்கு அனுமதிப்பதுதான் நல்லிணக்கமா? - கொக்கரிக்கும் விமல்

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வு என்ற பெயரில் மரணித்த விடுதலைப்புலிகளைத் தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவு கூருகின்றார்கள். எனவே, அங்கு இனிமேல் எந்தவொரு நினைவேந்தல் நிகழ்வுக்கும் அநுர அரசு அனுமதி வழங்கக்கூடாது.**



எமது இந்தக் கோரிக்கையை அநுர அரசு புறக்கணித்தால் அதற்கு எதிராகத் தெற்கில் நாம் மக்களை அணி திரட்டிப் போராடுவோம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

'இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தான் தமிழர்கள் செறிந்து வாழ்கின்றார்கள். அங்கு அவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் - சட்டங்களுக்கு மதிப்பளிக்காமல் தாம் நினைத்த மாதிரி வாழ்கின்றார்கள்.


வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வு என்ற பெயரில் மரணித்த விடுதலைப் புலிகளை தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவு கூருகின்றார்கள். கடந்த 27 ஆம் திகதி கடும் மழை, வெள்ள அனர்த்தங்களுக்கு மத்தியிலும் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் மாவீரர் நாள் நிகழ்வில் பங்கேற்றுள்ளார்கள். இது தெற்கில் வாழும் சிங்கள மக்களைக் கொதிப்படையச் செய்யும் நடவடிக்கையா்கும்.

தமிழ் மக்களின் பார்வையில் மாவீரர்கள் யார்? அவர்கள், இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி மரணித்த விடுதலைப் புலிகளாவர். நாட்டை அழித்த, சிங்கள மக்களைக் கொடுமைப்படுத்திய அந்தப் பயங்கரவாதிகளை எப்படி நினைவேந்தலாம்? நாட்டின் சட்டத்தின் பிரகாரம் பயங்கரவாதிகளை நினைவேந்த அனுமதி இல்லை.

எனவே, மாவீரர் நாள் நிகழ்வுக்கு அநுர அரசு ஏன் அனுமதி வழங்கியது? தமிழ் டயஸ் போராக்களுக்குப் பயந்து அநுர அரசு செயற்படுகின்றதா?

வடக்கு, கிழக்கில் இனிமேல் எந்தவொரு நினைவேந்தல் நிகழ்வுக்கும் அநுர அரசு அனுமதி வழங்கக் கூடாது. எமது இந்தக் கோரிக்கையை அநுர அரசு புறக்கணித்தால் அதற்கு எதிராகத் தெற்கில் நாம் மக்களை அணி திரட்டிப் போராடுவோம்.

வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு - மாவீரர் நாள் நிகழ்வுக்கு அனுமதி வழங்குவது தான் நல்லிணக்கம் அல்ல என்பதை அநுர அரசு புரிந்துகொள்ள வேண்டும்.' என அவர் தெரிவித்தார். (நி-8)



## மாவைக்கந்தனின் பாலஸ்தாபன பாலாய கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய பாலஸ்தாபன பாலாய கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 5.12.2024 வியாழக்கிழமை நடைபெறவுள்ளதுடன் 11.04.2025 பங்குனி உத்தர நன்நாளில் மஹா கும்பாபிஷகமும் நடைபெறவுள்ளது என மாவை ஆதீனக்கர்த்தா இரத்தின சபாபதிக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி-8)

## வைரவிழா ஆண்டில் கால் பதிக்கும் திருமறைக் கலாமன்றம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் 1965 ஆம் ஆண்டில் கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டது. நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தனது மன்றத் தினத்தை கொண்டாடுகின்ற நாளில் வைரவிழா ஆண்டில் கால் பதிக்கின்றது. இதனை முன்னிட்டு அன்றைய நாளில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

காலை 6.30 மணிக்கு இல. 17, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைஞான சுரபியான இல்லத்தில் நன்றி வழிபாடும், முற்பகல் 10 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வும் மாலை 4 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

மாலை நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

கலைநிகழ்ச்சிகளாக கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனம், திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் "நஞ்சுண்ட கண்டன்" நாடகம், "விண்ணக வீரன்" வடமோடி நாடகம் என்பவற்றுடன் கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் அறுபதாவது ஆண்டில் கால் பதிப்பதை முன்னிட்டு அடுத்த ஆண்டு பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 10 . 1951



இறப்பு 30 . 11 . 2024

### அமரர். கமலாதேவி சுப்பிரமணியம்

கொல்பிட்டி வீதி, ஒட்டுவெளி மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர். கமலாதேவி சுப்பிரமணியம் அவர்கள் 30.11.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும், சுபேந்திரன், சுதாகரன், சுபாசினி (தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் கிளிநொச்சி (APC), சுதர்சினி ஆகியோரின் அன்புத் தாயரும், வசந்தா, நந்தினி, பிரபாகரன் (பழனி முருகன் அரைக்கும் ஆலை கொடிகாமம் உரிமையாளர்), சதீஸ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சு.சுஜீபன், சு.தர்சிகா, சு.சுயிந்தினி, சு.சுபிக்சா, பி.பபிகரன், பி.தீபிகா, ச.டெனிசன், ச.டயன்சன், ச.டயன்சிகா, ச.கபிசன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.12.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் .11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்பாடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

கொல்பிட்டிவீதி,
ஒட்டுவெளி, மிருசுவில்.

தொடர்புக்கு: பிரபாகரன் (077 066 5703)
சுபாசினி (077 617 8487)

(c-1687)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை வெள்ளத்தால் தொற்று நோய்கள் பரவும் அபாயம்

## சுகாதாரத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக வைரஸ் காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.**

உணவு மற்றும் பானங்களை கொள்வனவு செய்யும் போது மற்றும் உட்கொள்ளும் போது பாதுகாப்பு வழிமுறை களைப் பின்பற்றுமாறு சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜி.விஜே சூரிய பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக ஆலோசகர் லஹிரு கொடித்துவக்கு, டெங்கு பரவுவதைத் தடுக்க நுளம்புகள் பெருகும் இடங்களை அகற்றுமாறு பிரதேச வாசிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் இந்த வருடத்தில் இதுவரை 45,448 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள துடன் மேல் மாகாணத்தில் மாத்திரம் 19,487 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் டெங்கு காய்ச்சலால் 22 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் ஓரளவு கட்டுப்பாட்டில்

## கால்நடை மருத்துவர்கள் சங்கம்

(கொழும்பு)

ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அரசு கால்நடை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நோயினால் பாதிக்கப்படாத பண்ணைகளில் உள்ள இறைச்சியைப் பாதுகாப்பான முறையில் மனித பாவனைக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சிசிர பியசிறி தெரிவித்தார்.

இதேவேளை, ஆபிரிக்க பன்றிக்காய்ச்சலால் பல பண்ணைகள் முற்றாக அழிந்துள்ளதாக உரிமையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே தமது தொழில்களை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் தெரிவிக்கின்றனர். (நி-8)

# சீரற்ற வானிலையால் உயிரிழப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நேற்று நண்பகல் 12 மணிவரையான காலப்பகுதியில் 24 மாவட்டங்களில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அனர்த்தங்களில் சிக்கி இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மழை, வெள்ளம் போன்ற அனர்த்தங்களால் ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 65 ஆயிரத்து 746 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலையால் ஏற்பட்ட அனர்த்தத்தில் சிக்கி இதுவரை 19 பேர் காயமடைந்துள்ளனர். இந்த அனர்த்தத்தில் 98 வீடுகள் முழுமையாகவும் 2,333 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

நாடளாவிய ரீதியில் 245 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் 8 ஆயிரத்து 984 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 596 பேர் இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (நி-8)

# லாஃப்ஸ் எரிவாயு தட்டுப்பாடு விரைவில் நிவர்த்தி செய்யப்படும்

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் லாஃப்ஸ் சமையல் எரிவாயு தட்டுப்பாடு விரைவில் நிவர்த்தி செய்யப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து முதற்தடவையாக கப்பலிலிருந்து கப்பலுக்குத் திரவப் பொருட்களைப் பரிமாற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து லாஃப்ஸ் சமையல் எரிவாயு நிறுவனத்தின் கப்பலுக்கு இந்தத் திரவ வாயு பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது.

இதன்படி, லாஃப்ஸ் சமையல் எரிவாயு நிறுவனத்துக்கு 3,170 மெட்ரிக் தொன் திரவ எரிவாயு அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் லாஃப்ஸ் எரிவாயு தட்டுப்பாடு விரைவில் நிவர்த்திக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாடு முழுவதும் லாஃப்ஸ் எரிவாயு தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் வீடு களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 3,000 மெட்ரிக் தொன் எரிவாயுவை மாதாந்த அடிப்படையில் விநியோகம் செய்வதை உறுதி செய்யுமாறு அண்மையில் ஜனாதிபதி பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# நேற்று ஆரம்பமானது

## யாழ்ப்பாண சர்வதேச சதுரங்க போட்டி






(யாழ்ப்பாணம்)

இலங்கை சதுரங்க சம்மேளனம் மற்றும் ஆசிய சதுரங்க சம்மேளனம் ஆகியவற்றின் பூரண ஆதரவுடன் யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனம் நடத்தும் "யாழ்ப்பாண சர்வதேச சதுரங்க போட்டி 2024" நேற்று முதல் மார்கழி 4 ஆம் திகதி வரை கொக்குவிலில் அமைந்துள்ள செல்வா பலஸ் மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெற்று வருகிறது.

இப்போட்டியில் சுமார் 750 இற்கு மேற்பட்ட சதுரங்க வீரர்கள் பங்கு பற்றுகின்றார்கள். இவர்கள், இந்தியா, ஐக்கிய இராஜ்யம் மற்றும் இலங்கையின் சகல மாவட்டங்களில் இருந்தும் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

போட்டியின் தொடக்க விழாவில் பிரதம விருந்தினராக ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு சிறப்பித்த தோடு சிறப்பு விருந்தினராக சிவபூமி அறக்கட்டளை நிறுவுநர் கலாநிதி ஆறு. திருமுருகனும் கலந்து கொண்டார். (நி-8-33)

# வெள்ளத்தாலும் யானைகளாலும் அழிவடையும் பயிர்கள்

## கவலையில் விவசாயிகள்

(தருமபுரம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு பகுதியில் பெரும் போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நெத்தலியாறு பகுதிகளில் தினமும் இரவு வேளைகளில் காட்டு யானைகள் வந்து நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்களை அழித்து வருகிறது.

தற்பொழுது தான் வெள்ளம் மெல்ல மெல்ல படிந்து வரும் நிலையில் யானைகள் தொடர்ச்சியாக நெற்பயிர்களை அழித்துவருகிறது.

நெற்செய்கை மேற்கொண்டு 40 நாட்கள் கடந்த நிலையில் உள்ள பயிர்களை மிதித்து அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். இந்நிலை ஒவ்வொரு வருடமும் தமக்கு ஏதோ ஒரு வகையில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் பொழுது அழிவுகளே அதிகமாக ஏற்பட்டு வருவதாகவும் இதற்கான நட்ட ஈடு எமக்கு எவராலும் வழங்கப்படுவதில்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கோரல்-2025

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆலய முகாமைத் திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். புதிதாக விண்ணப்பிப்பவர்களாயின் **"முதலாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பிவைக்க வேண்டும். ஏற்கனவே 2024 ஆம் ஆண்டில் வழிபடுநர் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தமது உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்வதற்கு **"இரண்டாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். நேரில் வந்து பெறமுடியாதவர்கள் கீழே காட்டப்பட்ட மாதிரிக்கு அமைய படிவத்தை சுயமாகவே தயாரித்தும் விண்ணப்பிக்க முடியும். **விண்ணப்ப முடிவுக் காலம் 01.12.2024 தொடக்கம் 31.12.2024 பிற்பகல் 5.00 மணி வரையாகும்.**

கோவிலில் உபயகாரராக இருக்கும் ஒருவர் பத்து ரூபாவுக்கான (ரூபா 10/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் உபயம் இல்லாதவர்கள் ஐம்பது ரூபாவுக்கான (ரூபா 50/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் பெற்று விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி வைக்க வேண்டும். கட்டளைகள் யாவும் **"பொருளாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** எனும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். விண்ணப்பத்தை பூரணப்படுத்தி அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேற்பாகத்தில் **"வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2025"** எனக் குறிப்பிட்டு **"செயலாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரில் கையளிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற்பெட்டியினுள் சேர்க்கலாம். விண்ணப்பங்கள் சமாதான நீதிவான், இலங்கை நிர்வாகசேவை உத்தியோகத்தர், அரசாங்க பாடசாலை அதிபர், இந்து மதகுரு, கிராமசேவை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிபடுத்துபவரின் பெயர் உள்ளடங்கலாக அவரின் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்டாம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்று கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021 432 3440 / 021 432 3447 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளமுடியும்.

**ந.மோகனரூபன்**
**செயலாளர்**
**அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி**
**அம்மன் கோவில்,**
**நயினாதீவு.**

---

முதலாவது அட்டவணை - (படிவம் 01)

## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2025 ஆம் ஆண்டு

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :- ....................................
2. பிறந்தநாள் :-....................................
3. இந்துசமயத்தவரா? :-....................................
4. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் வழிபடுபவரா? :-.................
5. நீங்கள் உறுப்புரிமை 3(2)(ஏ) அல்லது 3 (2)(பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின், இந்த ஆண்டு கோவிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுத் தொடர்பான விவரங்களைத் தருக.

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச்சீட்டு தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விபரம் |
|---|---|---|---|
| | | | |

6. இலங்கை முகவரி
7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை/தபாற்கட்டளையின் விபரம்:-
   காசுக்கட்டளை/த.க இல ............................ அலுவலகமும் வழங்கிய நாளும் ............................ தொகை ............
8. நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.
9. இந்தக் கோவிலில் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ அல்லது குருவாகவோ நீங்கள் உள்ளீர்களா?
10. இக்கோவிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் விபரங்களையும் தருக.

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துவதோடு, வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராக பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்

................
விண்ணப்பதாரர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தை புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் ............................ ஆம் ஆண்டு ............ மாதம் ............ நாளன்று ............................என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

என் முன்னிலையில்
........................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

**குறிப்பு:-** விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான்,இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்ராம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**2024.12.31** ஆம் திகதி மாலை **5.00** மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

---

இரண்டாம் அட்டவணை - (படிவம் 02)

## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமையை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் 2025 ஆம் ஆண்டு

செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

**வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்**

.................... ஆண்டு ஜனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான எனது சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன் ............................ அஞ்சலகத்தால் ................ ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட இலக்கங்கொண்ட காசுக்கட்டளை / தபாற்கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர் :-....................................

முகவரி :-....................................

எனக்குள்ள உபயம் :-....................................

உபயக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :-....................

............................
உறுப்பினர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம், எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு என் முன்னிலையில் ........ஆம் ஆண்டு..... மாதம் ........நாளன்று.... என்னுமிடத்தில் தமதுகையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதிசெய்கின்றேன்.

என் முன்னிலையில்
........................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

**குறிப்பு:**விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்ராம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**2024.12.31** ஆம் திகதி மாலை **5.00** மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(சி-1684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிந்தோட வழியின்றி வயல்களுக்குள் வெள்ளம்

## அழிவடையும் பயிர்கள்

(சாவகச்சேரி)

வெள்ள அனர்த்தம் காரணமாக தென்மராட்சியின் பல பாகங்களிலும் நெற் பயிற்செய்கை அழிவடையும் அபாயத்தில் உ:ள்ளது.

அண்மையில் பெய்த கனமழை காரணமாக தென்மராட்சியின் பெரும்பாலான கிராமங்கள் வெள்ள அனர்த்தத்தைச் சந்தித்துள்ளன.

இந்நிலையில் வயல் நிலங்களில் தேங்கி நிற்கும் மேலதிக நீர் கடலைச் சென்றடைய வழியின்றி தொடர்ந்தும் தேங்கி நிற்பதால் நெற் பயிர்கள் நாளடைவில் அழிவைச் சந்திக்கும் அபாயநிலை காணப்படுகின்றது.

கச்சாய், அல்லாரை, மட்டுவில், தனங்கிளப்பு, அறுகுவெளி, மறவன்புலோ, கைதடி, சரசாலை, எழுதுமட்டுவாழ் பகுதிகளைச் சேர்ந்த வயல் நிலங்களே இவ்வாறு பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

தென்மராட்சியின் பல கிராமங்களிலும் வயல் நிலங்களில் காணப்படும் மேலதிக நீர் வடிந்தோடுவதற்கான வாய்க்கால் வசதிகள் சீரின்மையால் வருடா வருடம் நெற்பயிர்கள் அழிவைச் சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(நி-8-30)


**மணமகன் தேவை**

1998, இந்து மிருகசீரிடம், DEVELOPMENT OFFICER பூர்வீகம்-பூநகரி, வதியுமிடம்-வவுனியா மணமகள் பதிவு இல: 11222. தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே.

இணையவழி திருமணசேவை
அழையுங்கள்- 076 664 9401 (C-2498)
www.EQMarriage Service.com

**மணமகள் தேவை**

1990, இந்து பரணி, SOFTWARE ENGINEER பூர்வீகம்-அனலைதீவு, வதியுமிடம்-SINGAPORE மணமகன் பதிவு இல: 11226. தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே.

இணையவழி திருமணசேவை
அழையுங்கள்- 076 664 9401 (C-2498)
www.EQMarriage Service.com

**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (358)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

**பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு**
கார்த்திகை 25 - மார்கழி 10

JSAC

01 மார்கழி 2024

"பால்நிலைசார் வன்முறையை
தடுப்பதற்கான முதல் வழி 'சமத்துவம்'
இதனை எல்லா இடங்களிலும் பேணுவோம்"

16 2024

(சி-1685) யாழ். சமூக செயற்பாட்டு மையம்


# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2025 ஆம் ஆண்டிற்கான சான்றிதழ் தர (NVQ மட்டம் 3,4) மற்றும் டிப்ளோமா தர (NVQ மட்டம் 5,6) கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. முழு நேர கற்கை நெறிகள் இலவசமானவை, தரம் 10 தகைமை உடையோர் முதல் க.பொ.த (உ/த) (A/L) உயர்தர தகைமை உடையோர் வரை கற்கக் கூடிய கட்டட நிர்மாணத்துறை, தன்னியக்க இயந்திரவியல், மின் மற்றும் இலத்திரனியல், வர்த்தகம் மற்றும் மொழித்துறை, கணனிசார், தொலைத் தொடர்பு தொழிநுட்பவியல் போன்ற துறைகள் சார்ந்த 50 இற்கு மேற்பட்ட கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கற்கை நெறியை பயில விரும்பும் தகுதியுடையோர் பணிப்பாளர், தொழில் நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். மேலதிக விபரங்களை dtet.gov.lk என்னும் இணைத்தளத்தில் பார்வையிடலாம். அல்லது தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் நேரடியாகவோ அல்லது 021 221 2403, 021 222 0028 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவோ பெற்றுக்கொள்ளலாம் என அதன் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-8)


## இலங்கை நூலக சங்கம்

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா (DLIS) - 2024/2025 பாடநெறிக்கான

விண்ணப்பம் கோரல்

ஒரு தொழில்சார் நூலகராகவும் / தகவல் நிபுணராகவும் ஆக வாய்ப்பு

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியானது, நூலக தகவல் துறைசார்ந்த நிறுவனங்களில் உங்கள் தொழில் துறையினை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக காணப்படுகின்றது.

**நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறி - 2024/2025 கல்வியாண்டு**

**நுழைவுத் தகுதிகள்**

| | |
|---|---|
| 1. | பல்கலைகழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது ஒரு துறையில் பெற்ற பட்டப்படிப்புப் பட்டம் **அல்லது** |
| 2. | I. க.பொ.த. உயர் தரம் (G.C.E. A/L) ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் **மற்றும்** II. க.பொ.த. சாதாரண தரம் (G.C.E. O/L) ஒரே அமர்வில் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதோடு முதலாம் மொழி (சிங்களம் அல்லது தமிழ்)மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடத்தில் திறமைச் சித்தியுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். **அல்லது** |
| 3. | அங்கீகரிக்கப்பட்ட நூலகத்தில் மூன்றாண்டுகளுக்குக் குறையாமல் நிரந்தரமாகப் பணிபுரிந்திருத்தல் வேண்டும்.மேலே உள்ள 2 (II) யினையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |

**அரச மற்றும் தனியார் தகவல்/ நூலக நிறுவனங்களில் தொழில் துறைசார் நுழைவுக்கு அடிப்படை தகைமையாக இந்த கற்கைநெறி அங்கீகரிக்கப்படுகின்றது. இந்த கற்கை நெறியை வெற்றிகரமாக தொடரும் பட்சத்தில் கலாநிதி கற்கை வரையான உயர் கல்வி வாய்ப்பினை பெறமுடியும்.**




நூலகத்துறையில் திருப்திகரமான 3 வருட அனுபவத்தின் பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் நூலக தகவல் அறிவியல் தேசிய நிறுவனம் வழங்கும் முதுகலை டிப்ளோமாவிற்கு நுழைவுத் தகுதி

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மூலம் வழங்கப்படும் Bachleor of Library Science பட்டத்திக்கான நுழைவுத் தகமை

**கற்கைநெறி வழங்கப்படும் முறை**

(i) கற்பித்தல் முறை : கலப்பு முறை
(ii) காலம் : ஒரு வருடம்
(iii) கற்பித்தல் மொழி : வகுப்புக்கள் ஞாயிறு கிழமைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும்
(iv) கட்டணம் : ரூபா 25000/=
(v) வகுப்புக்கள் ஆரம்பம்: 2025 ஜனவரி

**விண்ணப்ப விபரமும் விண்ணப்பிக்கும் முறையும்**

1. விண்ணப்பத்தை இலங்கை நூலகச் சங்க (SLLA) இணையத்தளத்திலிருந்து (www.slla.lk) பெற்றுக்கொள்ள முடியும்.
2. விண்ணப்பக் கட்டணம் ரூபா: 1000/- தயவு செய்து இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் விண்ணப்பக் கட்டணத்தை இல. 0002323087 என்ற வங்கிக் கணக்குக்கு செலுத்தி அசல் பற்றுச் சீட்டினை அனுப்பவும். (பற்றுச் சீட்டின் நகலினை தம்வசம் வைத்துக் கொள்ளவும்)
3. விண்ணப்ப இறுதித் திகதி : 20 டிசம்பர் 2024

கல்வி அதிகாரி, இலங்கை நூலகர் சங்கம்,
275/75, OPA மையம், பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை,
கொழும்பு-07.
தொலைபேசி : 0112589103, 0715421421
மின்னஞ்சல் : education.slla@gmail.com
இணையம் : www.slla.lk

(சி-2498)


# இராசிபலன்

01.12. 2024
கார்த்திகை 16, ஞாயிற்றுக்கிழமை
அமாவாசை பிற்பகல் 12.14 மணிவரை
அனுசம் பிற்பகல் 3.14 மணிவரை
சுபநேரம் -9.14-10.44 மணிவரை
இராகுகாலம் 4.44-6.14 மணிவரை
சந்திராஷ்டமம் - அச்சுவினி, பரணி

வளவன்




வழிபாட்டால் வளர்ச்சி காணவேண்டிய நாள், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விரயங்கள் கூடும், கடன் தொல்லைகள் அதிகரிக்கும்.




குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், நம்பி வந்தவர்களுக்கு உதவும் நாள், கடன் தொல்லைகள் குறையும், முயற்சிகள் கைகூடும்.




நன்மைகள் நடைபெறும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வியாபார விருத்தியுண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.




நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.




உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், செயற்பாடுகளில் முன்னேற்றமுண்டு, நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தேவைகள் பூர்த்தியாகும், புதிய முயற்சிகள் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.




வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய நண்பர்களின் தொடர்புகள் கிடைக்கும்.




வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், சுற்றியிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வங்கியில் வைப்பு நிதியை உயர்த்தும் எண்ணம் உருவாகும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.




அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வரலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறலாம்.




குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்கால நலன் கருதி புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம்.

**தெரியாமல் கலைந்து போகின்றது ஒரு சிலரின் ஆசைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 469
Viber 076 636 3378



# நாம் இயற்கையைச் சீண்டினால்...!






**இயற்கை அனர்த்தம் தொடர்பில் எம்மிடம் சரியான வழிமுறைகளோ, மக்களுக்கு விழிப்புணர்வுகளை வழங்கும் நடவடிக்கைகளோ இல்லை என்பது தான் கவலைக்குரிய விடயம்**

பெங்கால் புயல் அனர்த்தத்தினால் வடக்கு பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு மாகாணத்துக்கு கொடுக்கப்பட்ட சிவப்பு எச்சரிக்கை தளர்த்தப்பட்டிருந்தாலும் பாதிப்புக்கள் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

பெங்கால் புயலின் தாக்கத்தினால் யாழ்.மாவட்டத்தில் 21 ஆயிரத்து 619 குடும்பங்களைச் சேர்ந்த 72 ஆயிரத்து 321 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவம் அறிவித்துள்ளது.

பெங்காலின் தாக்கத்தை வரலாறு காணாத வெள்ளம் என ஊடகங்கள் விபரித்திருந்தாலும் பொது மக்களின் அநாவசிய செயற்பாடுகளின் தாக்கமே இப்பேரிடருக்கு காரணம் எனலாம்.

கடந்த வருடம் தமிழகத்தில் பெரும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டிருந்தது. குறித்த அனர்த்தத்தில் மிகப்பெரும் தாக்கத்தை எதிர்நோக்கியது சென்னைப் பெருநகரம். சென்னையில் வெள்ளப் பாதிப்பு நீங்க இரண்டு மாதங்கள் வரை எடுத்துக் கொண்டது.

ஆயினும் இம்முறை பெங்கால் புயலின் தாக்கம் சென்னையில் இருந்த போதிலும் சென்னையை வெள்ள அபாயம் பெரிதாக தாக்கவில்லை.

இதற்கு தமிழக அரசின் அதிரடி நடவடிக்கைகளும் அனர்த்தம் தொடர்பில் சரியான திட்டமிடல்களுமே காரணம் எனலாம். ஆனால் எம்மிடம் இயற்கை அனர்த்தம் தொடர்பில் சரியான திட்டமிடலும் இல்லை விழிப்புணர்வும் இல்லை என்பதே உண்மை.

நாம் இருக்கும்வரை இருந்து விட்டு தலைக்கு மேல் வெள்ளம் வந்தவுடன் மண்வெட்டியைத் தூக்குவதில் பயன் ஏதும் இல்லை.

முதலில் இயற்கையையும் அனர்த்தத்தையும் நாம் வேறுபடுத்துவதை நிறுத்த வேண்டும்.

பருவமழைக் காலம் எது என்பதை புரிந்து அதற்கேற்றாற்போல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதே சாலச்சிறந்தது.

இயற்கையாய் கிடைக்கும் மழைவீழ்ச்சி ஆறு குளங்களைச் சென்றடைந்து மேலதிக நீரானது கடலைச் சேரும். இதுவே இயற்கை நியதி.

அந்த வழிகளையெல்லாம் நாம் தடுத்து நிறுத்தி விட்டு இயற்கையை அனர்த்தம் என்று கூறுவதில் பயன் ஏதும் ஆகப் போவதில்லை.

மழைக்காலங்களில் வீட்டின் வளவில் சேரும் நீர் உயிர் வேலிகளினூடாக சென்று நீரோட்டத்தை அடைந்து குளம், குட்டைகளைச் சென்றடையும். இப்போது நாம் உயிர் வேலிகளை அழித்து விட்டு வளவைச் சுற்றி சுற்று மதில் அமைத்து விட்டோம். அவ்வாறெனின் வீட்டு வளவில் சேரும் வெள்ளம் எவ்வாறு வெளியே செல்லும்.

நீர் வ[illegible] களைக் [illegible] மரங்களைத் தறித்து, சட்ட விரோத கட்டடங்களைக் கட்டி, கொங்கிறீட் மரங்களை நாட்டினால் அது ஒரு நாளும் அனர்த்தத்தை தவிர்க்காது.

மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய நீர் நிலைகளை ஆக்கிரமித்து அதில் பாரிய கட்டடங்களைக் கட்டினால் மழைநீர் எங்கே தேங்கி நிற்கும்?

வீதி அபிவிருத்தி என்ற பெயரில் எதுவித முன்னெச்சரிக்கையும் இன்றி வீதிகளை கருங்கற்கள் கொண்டு உயர்த்தி நீரோட்டத்தை தடுத்ததுடன் சரியான முறையில் வெள்ளம் வழிந்தோடும் கான்களை, மதகுகளை அமைக்காமல் விட்டு; பொருத்தமற்ற முறையில் அவற்றை அமைத்தமை ஒருநாளும் அனர்த்தத்தை தவிர்க்காது.

தற்போதைய வெள்ள அனர்த்தத்திற்கு தொடருந்து பாதைகளும் பெரும் பங்காற்றுகின்றன என்றே கூற வேண்டும்.

90 களுக்கு முற்பகுதியில் தரை மட்டத்துடன் இருந்த தொடருந்து பாதைகள் இப்போது சுமார் ஐந்து அடி வரை உயர்த்தப்பட்டமை வெள்ளம் வழிந்தோடாமைக்கு மிகப் பெரும் பங்காற்றுகின்றது என்பதை எவரும் புரிந்து கொள்ள வேயில்லை.

இவை அனைத்தையும் விட பொதுமக்களின் அக்கறையீனம் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவே செய்கிறது.

யாழ்.நகரின் கால்வாய்களைத் துப்பரவு செய்யும் போது அதில் அதிகமாக காணப்படுவது பிளாஸ்ரிக் வெற்றுப் போத்தல்களே. இந்த சிற்றறிவை கூட புரிந்து கொள்ளாதவர்கள் குறித்த வெற்றுப் போத்தல்களை குப்பைக் கூடையினுள் இடாமல் வீதிகளில் எறிய, அவை கால்வாய்களை ஆக்கிரமித்து வெள்ளம் வழிந்தோடாமல் அனர்த்தத்தை ஏற்படுத்தி நிற்கின்றன.

இயற்கை அனர்த்தம் தொடர்பில் எம்மிடம் சரியான வழிமுறைகளோ, மக்களுக்கு விழிப்புணர்வுகளை வழங்கும் நடவடிக்கைகளோ மந்த கதியிலேயே காணப்படுகின்றன.

இயற்கை அனர்த்தம் தொடர்பில் அறிந்து கொள்ள தமிழ் நாட்டின் செய்தித் தளங்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது எனின் அது தொடர்பில் நாம் எங்கே நிற்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

எத் தாக்கத்திற்கும் அதற்கு இணையான மறு தாக்கம் உண்டு என்ற நியூட்டனின் விதியே இங்கு பிரயோ கிக்கப்படுகிறது.

இயற்கைக்கு நாம் எந்த தாக்கத்தைக் கொடுக்கின்றோமோ அதற்கு மறு தாக்கத்தை இயற்கை எமக்கும் கொடுக்கும்.

இதை நாம் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

இதிலிருந்து மீள்வதற்கு அரசாங்கம் அனைத்தையும் செய்யும் என்ற மென்போக்குத் தன்மையினை விடுத்து எமது சூழலை காக்க வேண்டியது எம் ஒவ்வொருவருடைய கடமை என்ற எண்ணம் எம்மிடம் மேலோங்க வேண்டும்.

அப்போது தான் இயற்கையின் சீற்றம் நம்மைச் சீண்டாமல் இருக்கும்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

நாட்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது, அம்பாறையில் உயிரிழந்த முஸ்லிம் மாணவர்கள் ஐவர் உட்பட ஏழு பேர் அடங்கலாக நாடு முழுமையாகவும் உயிரிழந்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** மாரி காலம் எண்டால் அது பெருமழை தானே.

அந்தக் காலத்தில நான்கு ஐந்து நாட்களாகத் தொடர்ந்து மழை பெய்ததுண்டு.

நாங்கள் செய்த புகையிலைத் தோட்டங்கள் துஞ்சிப் போனதுமுண்டு.

அதேநேரம் எந்தப் பெரிய மழை பெய்தாலும் வெள்ளம் வழிந்தோடிவிடும்.

ஆனால் இப்பதான் மழை வெள்ளம் வீடுகளுக்குள்ள வந்து மக்களின்ர இயல்பு வாழ்க்கைக்குக் குந்தகம் செய்யுது.

**சாத்திரியார்:-** விதானையார் சொல்லுறது உண்மை த்தான். எண்டைக்கு, நீரோட்டத்தைக் கவனிக்காமல் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டதோ அண்டைக்குத் தொட்ட நாசம் எங்கட வீடுகளுக்குள்ள வெள்ளம் வரத் தொடங்கிற்றுது.

**மூப்பர்:-** சாத்திரியார், அந்தக் காலத்தில இயற்கையாக அமைந்த நிரோட்டங்களை எங்கட விற்பன்னர்கள் தடுத்ததோட, மழை வெள்ளம் தேங்குகிற சிறு சிறு குளங்களையும் நிரவி, அதில கட்டடமும் கட்டிப் போட்டம்.

உதாரணத்திற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆனந்த்க்குமாரசாமி விடுதி அத்திக்குளத்தை நிரவிக்கட்டப்பட்டது.

அதில விடுதி கட்டினது மழை வெள்ளத்திற்குத் தொரியாது தானே!

அதால பழக்கதோசத்தில அந்தச் சுற்றாடலில உள்ள மழை வெள்ளம் எல்லாம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆனந்தக்குமாரசாமி விடுதியை நோக்கித்தான் வரும்.

**சிறாப்பர்:-** அது சரி ஆனந்தக்குமாரசாமி விடுதி எங்க இருக்குது.

**பண்டிதர்:-** அதுவும் சரிதான், கலாயோகி ஆனந்தக்குமாரசாமி விடுதி, பாலசிங்கம் விடுதி எண்ட பெயர்கள் எல்லாம் இல்லாமல் போயிற்றுது.

ஒரு காலத்தில யாழ்ப்பாணம் சேர். பொன். இராமநாதன் வீதியில யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்திற்குத் தென்பகுதியாக அமைந்திருக்கிற மாணவர்விடுதி தான், கலாயோகி ஆனந்தக்குமாரசாமி விடுதி.

இப்ப அந்தப் பெயர்கள் ஒண்டும் இல்லை. பெயர்கள் இருந்தால் தானே யார் கலாயோகி ஆனந்தக்குமாரசாமி எண்டு இளம்பிள்ளையள் கேட்பினம்.

உதெல்லாம் தேவையில்லாத வேலை எண்டோ என்னவோ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் விடுதிகளுக்கு இந்தப் பெயர்கள் இப்ப இல்லாமல் போயிற்றுது.

பரவாயில்லை. முன்னவர்களை நாங்கள் மறந்தால் தானே எங்களையும் பின்னவர்கள் மறப்பினம்.

**வாத்தியார்:-** உண்மை தான். இந்தாப் பாருங்க மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதால மட்டும் தான் எங்கட இளம் பிள்ளைகள், மாவீரர்களின்ர தியாகத்தையும் எங்கட மண் மீட்புப் போராட்டத்தையும் அறியினம்.

இருந்தும் வீரத்துடன் போராடி தமிழினத்திற்காக உயிர்நீத்த தியாகிகளின்ர பெயர் விபரங்களை எங்கட இளம் சந்ததி அறியவும் இல்லை. அதை அறிய வைப்பதற்கான ஏற்பாடுகளும் இல்லை.

இப்படியே நிலைமை போய்ச்சுதெண்டால் எங்கட பிள்ளைகள் செய்த தியாகம் எல்லாம் மறைபட்டுப்போய்விடும்.

**சாத்திரியார்:-** என்ன இருந்தாலும் இந்த முறை கெடுபிடிகள் இல்லாமல் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. முன்பெண்டால், மாவீரர்களின் நினைவேந்தலுக்குத் தடைவிதிக்கக்கோரி பொலிஸார் நீதிமன்றங்களில மனுத்தாக்கல் செய்யத் தொடங்கிவிடுவினம்.

ஆனால் இந்த முறை அப்படியான வேலைகளில பொலிஸார் இறங்கவில்லை.

**மூப்பர்:-** எல்லாம் ஆட்சியில இருக்கிறவர்களைப் பொறுத்தது தான்.

எப்பவும் மனச்சாட்சியுள்ளவர்கள் நாட்டை ஆள வேணும். இல்லை எண்டால் நினைவேந்துகிற உரிமைகூட இல்லாமல் தான் போகும்.

**பண்டிதர்:-** அது சரி, அந்தக் காலத்திலும் இப்படியான மழை வெள்ளம் ஏற்பட்டதுண்டு, ஆனால் இப்பதான் மழை வெள்ளம் வீடுகளுக்குள்ள வந்து அனர்த்தத்தை ஏற்படுத்துது.

இதற்கு வீதியமைப்பு, புகையிரத நிலையப் பாதையின் உயரம், வெள்ள வடிகால்களை ஆக்கிரமித்தமை என்பன தான் காரணம் எண்டு சொல்லப்படுகுது.

அதேநேரம் வெள்ளம் வழிந்தோடுகின்ற இடங்களை மறித்துச் சட்ட விரோதமாகக் கட்டப்பட்ட கட்டிடங்களை - மதில் சுவர்களை அகற்றச் சொல்லி வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவிட்டிருக்கிறார்.

அந்த உத்தரவு நடக்குமோ.

**விதானையார்:-** ஒருக்காலும் நடக்காது. அப்படி நடக்க வேணு மெண்டால், அந்தப் பகுதி மக்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் செய்ய வேணும்.

அப்படியேதும் ஆர்ப்பாட்டம் நடந்தால், அது தொடர்பில அரச நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கும். மற்றும்படி ஒண்டும் நடக்காது.

**சிறாப்பர்:-** அப்ப ஒவ்வொரு மாரிகாலத்திலும் எங்கட மக்கள் இடம்பெயர்ந்து போறது தான் விதி ஆயிற்றோ.

**வாத்தியார்:-** இந்தாப் பாருங்க நல்லூரில இருக்கிற பிராமணக்கட்டுக் குளம் புனரமைக்கப்பட்டு எவ்வளவு காலம். பிராமணக்கட்டுக் குளத்தை இன்னும் பத்து, பதினைந்து அடிக்கு ஆழமாக்கினால், நல்லூர்ச் சுற்றாடலில தேங்குகிற மழை வெள்ளத்தில கணிசமான வெள்ளம் பிராமணக் கட்டுக் குளத்தில தேங்கும்.

இதை நாங்கள் சொன்னால், குளத்தைப் புனரமைக்க நிதி இல்லை எண்டு சொல்லுவினம்.

**பண்டிதர்:-** ஏன் வாத்தியார் ஆரியக் குளப் புனரமைப்பு அரச நிதியிலையோ நடந்தது இல்லைத் தானே!

அதேபோல நல்லூர் பிராமணக்கட்டுக் குளத்தைப் புனரமைப்புச் செய்யிறதுக்கு உதவுங்கள் எண்டு அருகில இருக்கிற அகில இலங்கை இந்து மாமன்றத்திடமோ அல்லது சிவபூமி அறக்கட்டளையிடமோ கேட்டால், அந்த அமைப்புகள் நிச்சயம் உதவும்.

ஆனால் அதைக் கேட்டு நடைமுறைப்படுத்துறதுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேணும்.


வாத்தியார்:-சரி... சரி.. இந்த முறை எங்கட பிரதேசத்தில ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் எங்கள் அனைவருக்கும் தக்க பாடமாக இருக்க வேணும்.

அதோட எதிர்காலத்தில இப்படியான வெள்ள அனர்த்தம் ஏற்படாமல் இருப்பதற்காக, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் விடுத்த உத்தரவை (வெள்ளம் வழிந்தோடுவதைத் தடை செய்கின்ற கட்டுமானங்களை அகற்றுதல்) அமுல்படுத்துங்கள்.

அனுமதி பெறாமல் இடம்பெறும் கட்டுமானங்களை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அமைப்புகள் முற்றாகத் தடுத்தல்.

எந்த இடங்களில வெள்ளம் வீடுகளுக்குள்ள போகுது. எந்தெந்த வீதிகளில வெள்ளம் தேங்கி நிற்குது என்பதை அனுபவத்தில கண்டிட்டம். இது தொடர்பில சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் சீராக்கப் பணிகளைச் செய்ய வேணும் எண்ட தீர்மானத்தை ஆலடியில நிறைவேற்றுவம் என வாத்தியார் கூற,

அந்தத் தீர்மானத்தை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ள, அதைத் தானும் அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## நீரோட்டத்தைத் தடுக்கும் கட்டுமானங்களை அகற்றுக!

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவீரர் நினைவேந்தலுக்கு இம் முறை எந்த எதிர்ப்பும் இல்லையே வியாசரே?

**தருஷ் — வதிரி**

**எதற்கும் ஒரு எல்லை உண்டு என் பதை எப்படி விளக்கலாம்?**

அடுத்த வளவில் ஆளில்லை என்றால் அதன் எல்லையை அரக்கிப்போடும் எம் மவர்களுக்கு எல்லையைப் பற்றி கூற வேண்டுமோ என்ன?

**அஸ்தி — இளவாலை**

**விதியை மதியால் வெல்லலாமா வியாசர் மாமா?**

நீ நினைத்தது நடக்கவில்லை என்றால் அந்தப் பழியைத் தூக்கி விதியின் மேல் போட்டுவிடு.
நீ நினைத்தது நடந்து விட்டது என்றால் அந்தப் பெருமையை உன் சாதனைப் புத்தகத்தில் எழுதிவிடு.
இதுதான் விதியைமதியால்வெல்வதென்பது.

**இந்து — மானிப்பாய்**

**கடவுள் இருக்கிறாரா இல்லையா வியாசரே?**

கடவுள் எப்படிப்பட்டவர் என்றால், கண் தெரியாத பிச்சைக்காரன் பாத்திரத்தில் அன்பனே பயப்படாதே இன்றுடன் உன் கஷ்டமெல்லாம் நீங்குகிறது. நாளை முதல் உன் பிரச்சினைகள் யாவும் சரி யாகிவிடும் என்று எழுதப்பட்ட துண்டுக் காகிதத்தை தினமும் அவனது பிச்சைப் பாத்திரத்தில் இடக்கூடியவரே.

**விஜயகுமார் — முகமாலை**

**தமிழ் மக்களின் தேவைகளை எம் தலைவர்கள் புரிந்து கொள்ள வில்லையே?**

எம் தலைவர்களின் தேவை என்ன வென்றால்,
தமக்கு வாழ்நாள் முழுவதும் பதவி. அந்தப் பதவியினூடே கிடைக்கும் சுக போகங்கள்.
வருடாவருடம் வாகன போமிட் வாங்கு வது, அதைக் கோடிகளுக்கு விற்பது, பார், எரிபொருள் நிரப்பு நிலைய அனு மதிகளைப் பெறுவது, நிழல் முதலாளி யாய் இருந்து அதனை இயக்குவது.
ஊரில் எங்கெங்கெல்லாம் சொத்துக் களை வாங்கிக் குவிக்கலாமோ அதை நாசுக்காக செய்து முடிப்பது.
அரசை ஆதரிக்க ஒரு ரேட், எதிர்க்க இன் னொரு ரேட். வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்க, எதிர்க்க, கழுக்கமாய் இருக்க இப்படி கோடிகளில் புரண்டவர்களால் மக்களின் தேவையைப் புரிந்து கொள்ள முடியுமா சொல்லுங்கள்?



# வியாசர் பதில்கள்

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
**076 097 3126**
என்ற இலக்கத்திற்கு
SMS,
Whats app செய்யுங்கள்

**தூரி — நவிண்டில்**

**சிறுவர்கள் அதிகம் கண்சார்ந்த நோய் களைச் சந்திப்பது ஏன் வியாசரே?**

பிள்ளைகள் அழுதால் அவர்களைத் தூக்கி அன்புகாட்டி, அரவணைத்து, கொஞ்சிக் குலாவி அவர்கள் அழுகையினை நிறுத்தும் காலம் மாறி பிள்ளையின் அழுகையை நிறுத்த தொலை பேசியை பிள்ளையின் கையில் எப்போது கொடுத்தோமோ அப்போதிலிருந்தே அழிவு ஆரம்பமாகிவிட்டது.
முன்பெல்லாம் 50 வயதிற்கு பிற்பாடே மூக்குக் கண் ணாடி போடுபவர்கள் இருப்பார்கள். இப்போதைய சிறுவர்களில் 10 இல் இரண்டு பேர் மூக்குக் கண்ணாடி அணிபவர்களாகவே இருக்கிறார்கள்.

**கிருஷ்ணா — கிளிநொச்சி**

**வெள்ளப் பேரிடர் நாட்டை அழித்துவிடும் போல இருக்கிறதே?**

திட்டமிடல் இல்லாத வீதிப்புனரமைப்பு. முறை யான அனுமதிகளின்றிய கட்டடங்கள், குளங் களை மூடி கட்டடங்களைக் கட்டிய நாசகாரம் என்பன எம்மையும் எம் சூழலையும் அழித்துக் கொண்டே இருக்கிறது.
இவ்விடத்தில் அதிகாரிகள் தயவு தாட்சணை யின்றி அனுமதியின்றி அமைக்கப்பட்டிருக் கும் கட்டடங்களை இடித்தழித்து வெள்ளம் கடலைச் சேரும்படி செய்ய வேண்டும்.
இந்தச் செயற்பாட்டில் ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இல்லாமல் இருக்க வேண்டும். ஏனென்றால் ஏழைக்கு குரல் உயரும். பணக் காரனுக்கு பணமே உயரும். இதில் குரலைப் பணம் வென்றே தீரும்.



வெள்ளப் பேரிடர் நாட்டை அழித்து விடும் போல இருக்கிறதே?

**விஜயதரன் — உரும்பிராய்**

**சிங்கள பேரினவாத சக்திகளின் சூழ்நிலையில் தமிழர்கள் வீழ்ந்து விட்டார்களா வியாசரே?**

ஒரு நாளும் இல்லை. இந்த நிலைக்கு எமது தமிழ் அரசியல் தலைவர்களே முற்றுமுழுதான காரணம்.
ஆம், எம்மை நம்பவைத்துக் கழுத் தறுத்தவர்கள் அவர்களே. இவர்கள் தேர்தல் நேரத்தில் பேசும் பேச்சுக்களில் ஒரு விகிதத்தைக் கூட பிற்பட்ட காலத் தில் பேசுவதில்லை.
தவிர, இனவாதத்தை எம்மீது திணித்தவர் களும் இவர்களே. அப்படியெனின் தோற் றுப்போனது தமிழ் மக்கள் தானே. தோற்ற வேதனை மக்களை அவ்வாறு சிந்திக்க வைத்திருக்கிறது அவ்வளவு தான்.

**சுதன் — குப்பிளான்**

**இந்த ஆட்சியிலாவது அரசியல் தீர்வு கிடைக்குமா வியாசரே?**

எம் தலைவர்களின் வெற்று வேட்டு களைகளை நம்பி ஏமாந்த தமிழினம் மாற்றத்திற்கு விரும்பியிருக்கிறது. இந்த மாற்றம் தமிழினத்துக்கு ஏலவே நடந்த கொடுமைகளுக்கு நீதியைப் பெற்றுத் தராதாயினும் இனி தமிழினம் துன்பப் பட அனுமதிக்காது என்று மக்கள் நம் பிக்கை கொண்டுள்ளனர்.
இந்த நம்பிக்கை ஒன்றே பெரும்பான்மை ஆட்சியாளர்களுக்குப் போதுமானது.
தமிழினத்துக்கு தனித்தேசம் தேவை யில்லை சமாதானமே தேவை என்று சர்வ தேசத்திடம் கூறுவதற்கு.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**மாவீரர் நினைவேந்தலுக்கு இம் முறை எந்த எதிர்ப்பும் இல்லையே வியாசரே?**

ஒரு போராட்ட அமைப்பில் இருந்து ஆட்சிப்பீடம் ஏறிய ஆட்சியாளர்களுக்கு போராட்டத்தின் மகிமையும் அவர்களின் தியாகத்தின் உச்சமும் புரிந்திருக்கிறது.
இறந்துபோன தனது உறவுகளை நினைவுகூரும் உரிமை மறுக்கப்படக் கூடியதன்று. ஆனாலும் இதுவரை காலமும் இனவாத அரசுகள் அதற்கு ஏதோ ஒரு வகையில் எதிர்ப்பைக் காட்டிக் கொண்டே இருந்தன.
ஆயினும் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நினைவேந்தலுக்கு ஒரு சிறு எதிர்ப்புக்கூட எழவில்லை. இந்த மாற்றத் தைத்தான் தமிழ் மக்கள் எதிர்பார்க் கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமையிலே மரணம் காணும் துயர வாழ்க்கை!

'தனிமையிலே இனிமை காண முடியுமா' என்று ஒரு திரைப்படப்பாடல். ஆனால் இதைப் பட்டிமன்றக் கேள்வியாக்காமல் அடுத்த வரியிலேயே விடையைத் தந்துவிடுகிறார் கவிஞர். 'நள்ளிரவினிலே சூரியனும் தெரியுமா?' ஆக தனிமை என்பது கொடுமைதான்.

'யாருமில்லாத தீவொன்று' போல அமைதியான சூழல், இடைஞ்சல் இல்லாத தனிமை சில சமயம் நமக்குத் தேவைப்படும். ஆனால் வாழ்க்கையே தனிமை என்றானால்? அதுவே மரணத்துக்கும் காரணமாகிவிடலாம்.

அப்படி ஒரு சூழல் ஒரு நாட்டில் பரவலாக ஏற்பட்டுவருகிறது. அங்கு தனிமையில் வாழும் நடுத்தர வயது மக்கள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன. ஒரு நாளில் அப்படி சராசரியாக 9 பேர் தற்கொலை செய்துகொள்கின்றனர். அங்கு தனிமையில் வாழும் 5 பேரில் 4 பேர் தற்கொலைச் சிந்தனை கொண்டவர்களாக இருக்கிறார்களாம்.

அந்த நாடு தென்கொரியா என்பதை அறிய வரும் பலருக்கும் வியப்பு உண்டாகக்கூடும். காரணம் வடகொரியாவைப் பற்றிப் பல எதிர்மறைத் தகவல்கள் நிலவுவது வழக்கம். பொருளாதாரத்தில் சிக்கல்கொண்ட நாடு, சர்வாதிகாரி போன்ற தலைவரைக் கொண்ட நாடு, சுதந்திரம் சிறிதும் அற்ற நாடு, தன்னைச் சுற்றிலும் ஒரு இரும்புத்திரையைப் போட்டுக் கொண்ட நாடு என்பதான தோற்றம் உண்டு. அதற்கு நேர்மாறான பிம்பம் கொண்டது தென் கொரியா. இங்கு சுமார் ஐந்து கோடி பேர் வசிக்கின்றனர். உலகின் பணக்கார நாடுகளில் ஒன்று. சாம்சங், ஹூண்டாய், கியா என உலகச் சந்தையில் தென்கொரிய மின்னணுச் சாதனங்கள், வாகனங்கள் ஆதிக்கம் செலுத்திவருகின்றன.

இப்படி பூலோக சொர்க்கம் என்று கணிசமானவர்களால் கருதப்பட்டுவரும் தென் கொரியாவில்தான் தனிமை மரணங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இதைத் தடுக்க அந்த நாட்டு அரசு 2,750 கோடி ரூபாயில் சிறப்புத் திட்டத்தை அறிவித்துள்ளது என்கிற அளவில் இது தீவிரமான பிரச்சினையாக மாறி வருகிறது.

தென்கொரிய மக்களின் வாழ்க்கை மகிழ்ச்சியாக இல்லை என்று பல ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. வீடுகளில் தனித்து வாழ்பவர்களில் பலர் மரணமடைவது சில நாட்களுக்குப் பிறகே தெரிய வந்து அவர்களின் உடல்களை மீட்க முடிகிறதாம்.

'தனிமை மரணம்' என்று தென்கொரிய சட்டம் வரையறுப்பது இதைத்தான். ஒருவர் தன் குடும்பம் மற்றும் உறவினர்களிடம் இருந்து பிரிந்து தனிமையில் வாழ்ந்து, அவர் தற்கொலை செய்துகொண்டு இறந்திருக்க வேண்டும், அல்லது நோய்வாய்ப்பட்டு இறந்திருக்க வேண்டும். அவர்களது உடல் சிறிது காலத்திற்குப் பிறகே கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

உலக சுகாதார அமைப்புகூட தனிமை மரணத்தை மனித இனத்தின் மீது நடைபெறும் மாபெரும் அச்சுறுத்தலாகக் கருதி அதன்மீது போர்த் தாக்குதல் நடத்த வேண்டும் என்று கூறியிருக்கிறது.

தனிமை காரணமாக தென்கொரியாவில் இறப்பவர்களில் பெண்களைவிட ஐந்து மடங்கு அதிகமாக ஆண்கள் இருக்கிறார்கள். பெரும்பாலும் 50-60 வயது கொண்டவர்கள்.


தென்கொரியாவில் பெரும்பாலான இளம் தலைமுறையினர் திருமணம் செய்யாமல் வாழ்கின்றனர். இதனால் மக்கள்தொகை சரிந்து கொண்டே செல்கிறது. திருமணம் ஆகாத இளைஞர்கள், இளம்பெண்கள் நடுத்தர வயதை எட்டும் போது விரக்தி அடைகின்றனர். இதனால் 40 வயது முதல் 55 வயதுக்கு உட்பட்டோர் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன.


ஜப்பான் மற்றும் சீனாவைப் போலவே தென் கொரியாவிலும் பிறப்பு விகிதம் கடந்த 10 ஆண்டுகளாகக் குறைந்துகொண்டே வருகிறது. இப்போதைய தீவிரமான பணிச்சூழல், அதிகரிக்கும் விலைவாசி போன்ற பல காரணங்களால் பெற்றோராவதைப் பலரும் தள்ளிப் போட்டுக்கொண்டு வருகிறார்கள். இதன் விளைவாக குழந்தைகள் இல்லாத பெற்றோர்களில் ஒருவர் இறந்தால் அவரது ஜோடி தனிமை உணர்வை மிக அதிக அளவில் உணர்கிறார்.

அதிகரித்துவரும் தனிமை மரணங்களைத் தடுக்க தென் கொரிய அரசு கடந்த சில வருடங்களாகவே நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 2021இல், தனிமை மரணங்களைத் தடுக்கும் மற்றும் நிர்வகிக்கும் சட்டம் என்றே ஒன்று உருவானது.

இதன்படி, தனிமையில் வாழ்பவர்களை உள்ளூர் அரசு அதிகாரிகள் அடையாளம் கண்டு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க முயல்கின்றனர். தோட்டங்கள், எளிய விளையாட்டுகளை விளையாடும் வசதிகள் கொண்ட இடங்கள், நூலகங்கள் போன்றவை பல இடங்களில் அமைக்கப்படுகின்றன.

தனியாக வசிப்பவர்களின் செல்போனில் ஒரு செயலி இணைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்கு அந்த செல்போன் பயன்படுத்தப்படவில்லை என்றால் அவசர கால எண் ஒன்றுக்கு இதுகுறித்த தகவல் அனுப்பப்படுகிறது.





# மன்னிப்பது இறைவனுக்கானது மட்டுமல்ல

இறைவனை 'கருணைக்கடல்' என்கிறோம். அப்படிப்பட்ட கடவுள், நாம் செய்த தவறுகளுக்காக நம்மை தண்டிப்பாரா. இறைவனின் சந்நிதானத்தில் அனைவருக்கும் மன்னிப்பு உண்டு. அதுதான் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய முக்கியமான பாடம்.

உமர்கயாம் பதினொறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீகக் கவிஞர். 'ரூபையாத்' என்ற புகழ் பெற்ற நூலை அவர் எழுதிக் கொண்டிருந்த நேரம் அது. ஒருநாள் மதபோதகர் ஒருவர் அவருடைய வீட்டுக்கு வந்தார். "என்ன எழுதிக்கொண்டிருக்கிறீர்கள். அந்தப் பக்கத்தை என்னிடம் காட்டுங்களேன்." என்றார் மதபோதகர். உமர்கயாம் அந்தப் பக்கத்தைக் காட்டினார்.

'நான் ஆட விரும்புகிறேன். பாட விரும்புகிறேன். நீங்கள் பாவம் என்று கருதிய அனைத்தையும் செய்ய விரும்புகிறேன். ஏனெனில், கடவுள் கருணையுள்ளவர். மனப்பூர்வமாக நம்புகிறேன். அவர் நிச்சயம் என்னை மன்னிப்பார். நான் செய்கிற பாவங்களெல்லாம் அவருடைய கருணையோடு ஒப்பிட்டால் ஒன்றுமில்லை.'

"என்ன இப்படி எழுதியிருக்கிறீர்கள். இது மக்களைக் கெடுப்பதாகாதா? அவர்களின் மத நம்பிக்கையை அழிப்பதுபோலாகாதா. இப்படி எழுதினால், கடவுளிடம் அவர்களுக்கு எப்படி பயம் ஏற்படும். 'தவறு செய்தால் தண்டிக்கப்படுவீர்கள்' என்று எழுதுங்கள்" என்றார் மதபோதகர். மறுத்துவிட்டார் உமர்கயாம். மன்னிப்பது இறைவனுக்கானது மட்டுமல்ல. மனிதனுக்கும் அந்தப் பண்பு வேண்டும்" என்றார். அவர் எழுதிய 'ரூபையாத்' முதல் எழுத்துப்பிரதி கொளுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




அதன்பின்னர் கோட்டைக்குள்ளிருந்த தேவாலயத்தின் முக்கியத்துவம் குன்றிப்போனது. எனினும் கோட்டைக்குள்ளிருந்த தேவாலயத்தின் மீது ஒல்லாத்தர் எக் காலத்தும் தமதென உரிமை கோரக் கூடாது என்பதற்காக. 1892 இல் கொழும்பில் இயங்கிய வூல் வெண்டால் கொன்சில்ரரி (Wolve ndal Consistory) யினருக்கு ரூபா ஆறாயிரம் வழங்கி உரிமையை வாங்கிக் கொண்டனர். அத்துடன் ரூபா எழுபத்தைந்தைச் செலுத்தி அதனுள்ளிருந்த அனைத்துத் தளபாடங்களையும் விலைக்கு வாங்கித் தமது உரிமையாக்கிக் கொண்டனர்.


தேவாலயத்திலிருந்த மிகப் பெரிய மணி ஒன்றை வூர்பெண்டல் கொன்சிஸ்ரரி அன்பளிப்பாக ஆங்கிலேயரிடமிருந்து வாங்கி அதனை சென் மைக்கேல் சேர்ச்சிற்கு ரூபா இருநூறுக்கு விற்று விட்டது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புதிதாக உருவாக் கப்பட்ட தொல் பொருள் ஆய்வுத் திணைக்களம் இத் தேவாலயத்தைப் பாதுகாக்கப்பட்ட தொல் கட்டிடம் எனப் பிரகடனப்படுத்திக் கொண்டது. எனினும், யாழ்ப்பாணத்திலிருந்த புரட்டஸ்தாந்து சமயத்தினரின் மூன்று பிரிவினர். அரசாங்கத்தின் அனுமதியுடன் ஆண்டில் மூன்று நாட்கள் இத் தேவாலயத்தில் வழிபாடு இயற்றி வந்தனர் எனத் தெரிகிறது.

ஆரம்பத்தில் ராணிமாளிகை இரு மாடிக்கட்டிடமாக இருந்தது. பின்னரே ஒரு தளக்கட்டிடமாக ராணி மாளிகை அமைக்கப்பட்டது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் கோட்டைக்குள்ளிருந்த "ராணி மாளிகை" சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளினதும், அரசாங்க அமைச்சர்களினதும் பருவதங்குமிடமாக விளங்கியது. யாழ்ப்பாணத்திற்கு வருகைதருகின்ற உயரதிகாரிகளும் ராணி மாளிகையில் தங்கிச் சென்றனர். ராணிமாளிகையில் விக்டோரியா மகாராணியின் முழு அளவிலான ஓவியப்படம் மாட்டப்பட்டிருந்தது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் சுப்பிரீம் கோர்ட் நீதிபதிகள் ராணி மாளிகையில் தங்கத்தொடங்கினர். அவர்களால் விசாரிக்கப்பட்டு மரண தண்டனை பெற்ற குற்றவாளிகள் யாழ்ப்பாணக் கோட்டையின் தூக்குமேடையில் தூக்கிலிடப்பட்டனர். அதற்கென யாழ்ப்பாணக் கோட்டையின் கிழக்குப்பகுதியில் உயர் பீடக் கொத்தளத்தில் தூக்கு மாட்டும் கோபுரம் அமைக்கப்பட்டது. நான்கு தூண்களும் கூரையும் கொண்ட அக்கோபுரத்தின் உச்சியில் பிணைக்கப்பட்ட வளையத்திலிருந்து தூக்குக்கயிறு தொங்கும்.

கீழே கால்கள் நிற்குமிடத்தில் தட்டுப் பலகை இடப்பட்டிருந்தது.

(தொடரும்...)




காலத்தின் பதிவு 132

# கடல் புறா

## எட்டாக் கனியும் கிட்டாக் கனியும்

"சிங்க முகம், பாம்பு முகம், யானை முகம், புலி முகம், எருமை முகம், பறவை முகம், இப்படி ஏதாவதொன்று அமைக்கத்தான் கப்பல் சாத்திரம் இடம் தருகிறது" என்றான் கண்டியத்தேவன்.

எந்த முகத்தை நமது மரக்கல முகப்பாக அமைக்க உத்தேசிக்கிறீர்? புலி முகத்தை.ஏன் ?

நமது சோழநாட்டுக் கொடி புலிக் கொடியல்லவா?" ஆம் இருப்பினும் நாம் சோழ நாட்டில் இப்பொழுதில்லை. புலி முகம் வேண்டாம். பறவை முகத்தை அமையுங்கள்.

கண்டியத்தேவன் பெரிதும் ஆச்சரியப்பட்டான். நாட்டுப் பற்றும் நாட்டுக் கொடிப் பற்றும் மிக அதிகமாக உடைய இளைய பல்லவன், தன் நாட்டுக் கொடியின் அடையாளம் தேவையில்லையெனச் சொன்னது பெரும் வியப்பாயிருந்தபடியால் அவன் கேட்டான். "எந்தப் பறவையின் முகத்தை அமைக்கட்டும்" என்று. "புறாவின் முகம், தடையின்றி வந்தது இளைய பல்லவன் பதில். புறா முகமா?

ஆம். புறாவின் முகம் முகப்பாக இருக்கட்டும். பக்கப் பகுதியை புறாவின் சிறகுகளைப் போல் அமையுங்கள். இந்த மரக்கலம் இனி கடலில் பறந்து செல்லும் பெரும் புறா. இந்தக் கடல்புறா சோழநாட்டு வரலாற்றைக் கடற் பகுதியில் விரிவு படுத்தும். இதன் புகழைத் தமிழகக் கவிகள் பாடுவார்கள். கடல்புறா இன்றியமையாத கடற் போர்க்கலமாக கடற் காவியமாக மாறும் என்று கூறிய இளைய பல்லவன், இப்படி வாரும் தேவரே என்றழைத்து தேவன் காதுக்கருகில் சில வார்த்தைகளை மிக ரகசியமாகச் சொன்னான்.

ரகசியத்தைக் கேட்ட கண்டியத்தேவன் மலைத்து நின்றான். அந்த மலைப்புடன் மலைப்பாக அவன் ஏதோ சொல்லவும் துவங்கினான். 'உம், பேச வேண்டாம், என்பதற்கறிகுறியாக வாயில் விரலை வைத்து எச்சரித்த இளைய பல்லவன் மஞ்சளழகி எட்டாக் கனி! கடல்புறா கிட்டாக் கனி! புரிகிறதா! என்று கூறிப் பெரிதாக நகைத்தான். பிறகு விடுவிடுவென கோட்டையை நோக்கி நடக்கத் துவங்கினான்.

கண்டியத் தேவன் மலைத்துப் போய் படைத்தலைன் போவதைப் பார்த்துக்கொண்டு நின்ற இடத்திலேயே நின்றான். அவன் மலைப்பே பெரிது. அதைவிடப் பெரிய மலைப்பு மாளிகையில் காத்திருந்தது கூலவாணிகன் சேந்தனுக்கு. இளைய பல்லவன் இட்ட ஒரே உத்தரவைக் கேட்டதும் அடியோடு நிலைகுலைந்து தடுமாறிப் போனான் கூலவாணிகன். ஐயையோ! என்னால் முடியாது. பெரும் ஆபத்து. என் தலை போய் விடும் என்று உளறினான். பெரும் கிலி குரலில் ஒலிக்க.

### முள்ளை முள்ளால் எடுக்கலாம்

கடற்போரில் மரக்கலத்தோடு மரக்கலம் மோதும் போது எதிரி மரக்கலத்தின் பலகைகளைப் பிளந்து சுக்கு நூறாக அடிக்கவல்ல பெரிய இரும்பு ஆணிகளை அடித்தளத்தில் உடைய அகூதாவின் சீனத்துக் கப்பலைப் பாரதத்தின் கப்பலாக மாற்றவும் அதன் எடையைக் குறைத்து அதற்குப் புறா முக முகப்பும், பறவைச் சிறகுகளும் அமைத்துக் கடல் புறாவாக அதை நீர்ப்பரப்பில் பறந்து செல்லும்படி ஏற்பாடு செய்யவும் உத்தரவிட்டு இந்தக் கடல்புறா தமிழகத்தின் கடற் காவியத்துக்குப் பெரும் பொன்னேடு சேர்க்கும்" எனவும் கூறி விட்டுச் சென்றதை எண்ணிப் பார்த்துப் பெரும் வியப்பைக் கண்டியத்தேவன் கடற்கரையில் அடைந்தானென்றால் இளையபல்லவன் இட்ட உத்தரவைக் கேட்டதும் விவரிக்க இயலாத பெரும் மலைப்பையும் திகிலையும் கூலவாணிகன் சேந்தன் கோட்டை மாளிகையில் அடைந்தான். அன்றைய காலையில். கடல்புறாவின் சிருஷ்டிக்கு உத்தரவை இட்டு விட்டு விடு விடு என்று நடந்து கோட்டை மாளிகைக்கு நேராக வந்து சேர்ந்த சோழர் படைத்தலைவன் மேல் தளத்திலிருந்த தன் இரு வாசல் அறைக்குச் சென்றதும் சில நிமிடங்கள் தீவிர யோனையில் இறங்கி அறையில் அங்கு மிங்கும் உலாவினான். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்தல் தகுமா?

அறிவோடு அறியாமை
இணைந்திடின் இகமதில்
சுகமென்று ஏதுமுண்டோ?
பகையென்ற சொல்லோடு
அணி செய்யும் சிரிப்போடு
வளர்கின்ற வழி தோன்றுமா?

கலையோடு மதிசேர்ந்து
நிலையாகும் நெறிகண்டு
விலைபோகும் மதி கூடுமா?
இழிவோடு கலைகண்டு
களிப்போடு வாழ்வோர்க்கு
இழப்பேதும் வருமா சொல்?

அழியாத கலைச்செல்வம்
புவிமீதில் நிலைகொண்டு
மனிதர்க்கு சுகம்தந்ததா?
மனிதாயம் தனைக்கண்டு
மண்மீதில் வாழ்வோர்க்கு
எந்நாளும் துயர்சேருமா?

சிந்திக்கத் தெரியாத
சிந்தனை உடையோர்க்கும்
வந்தனை செய்ய வருமா?
கலப்படம் செய்வாரின்
கலைகண்டு புவி வாழ்வோர்
நிலைபெற்று வாழ்தல் தகுமா?

வளவை வளவன்

## பூமாலையும் பாமாலையும்



வண்ண மலர் சோலையிலே
மலர்களெடுத்து மாலையாக்கி
எண்ணம் போல பலவகையாய்
கடவுளுக்கு சாத்திடுவோம் - அந்த
இயற்கை எழிலினை நாம்
போற்றிடுவோம்

வண்ணத் தமிழ் சொல்லெடுத்து
கவிதைகள் பல எழுதி
எண்ணங்களை கவிதை வடிவில்
வெளியிடுவார் - அவர்
திறனை நாடும் வியந்துநன்றி
சொல்லிடுவோம்

பூமாலை வாடிவிடும்
பாமாலை நிலைத்திருக்கும்
புலமை கண்டு பாமாலை
இயற்றிடுவார் கவிஞர்களே
இலக்கண மரபைப்
பேணுவோரை புலவர்
என்போம்

எஸ். சிவானந்தராசா, பண்டத்தரிப்பு.

## காதல்களின் காலம்

இரு வௌவால்கள்
மின்காந்த அலைகளால்
காதலிக்கின்றன
ஓர் ஆமை
தன் முந்நூறு வருடக் காதலை
சேமித்து வைத்திருக்கிறது
ஒரு வாண்டா தாவரம்
தன் மென்பஞ்சுத் தன்மையால்
காற்றைக் காதலிக்கிறது
இரு சாணிவண்டுகளின் காதல்
உலக உருண்டையை ஒத்தது
கடலில் இருந்து
தூய்மையான தண்ணீர்
நோக்கிப் பயணிக்கிறது
சால்மன் மீனின் காதல்.



க.புனிதன்

## மௌனத்தின் தேடல்-738



## அமைதிக்கு வழி

தொலைநோக்கைத் தொலைத்ததால்
விலைவாசி சிகரம் தொட்டது
ஒற்றை விரல் மைப் பூச்சும்
மொற்றத்தைவாரித் தந்ததால்
கிளர்ந்தெழுந்தது மக்கள் கூட்டம்
நிலை தடுமாறிப்போன யதிகாரம்
வேட்டுக்களைத் தீர்த்ததால்
காட்டுத் தர்பாரைக் கட்டுப்படுத்த
ஓங்கி ஒலித்த மக்கள் குரல்
ஓட்டுக்களால் அகங்காரத்தையடிக்கியது
திரும்பத்திரும்ப வரும் சிக்கலைத் தீர்க்க
விழிப்புணர்வே அமைதிக்கு வழி..

க.நாகராசா,நுணாவில்.

## ஓலமதை விஞ்சிடுமோ?

வெற்றியின் உச்சம் தொட்டு
தலையும் மிகக் கனத்து
கயவனே...!
நீயெழுப்பும் வீரமுழக்கம்
துச்சமென நீ மிதித்த
அலையும் பாவிகளின்
ஓலமதை விஞ்சிடுமோ?

செ.பன்னீர்ச்செல்வம்,நாவலர் வீதி.

## தாய் நாட்டுப்பற்று

பல பூத்த காலம் கண்ட பீரங்கி மேல்
நாட்டுப் பற்றுடன் மக்கள் தங்கள்
அழவற்ற மன மகிழ்ச்சியுடன் நாட்டுத் தேசிய
கொடியை உயர்த்தி வெற்றியின்
நோக்கத்துடன் அழவற்ற மன மகிழ்ச்சியுடன்
தங்கள் உணர்வுகளை வெளிக்
காட்டுகின்றனர் நாட்டுப் பற்றுடன்

த.வினுசியன்,
அரசடி வட்டுக்கோட்டை

## அன்பே ஆளும்

ஆட்டிறாறி செல் கொண்டு
அடக்கினாலும்
இவ் வுலகில் தர்மம் தழைப்பது
தவிர்க்க முடியாதுண்மை
அன்போடு அனைவரும்
வாழ வேண்டும்
என்றுதானே
அகிலத்தை படைத்தான்
அறிந்து கொள் மனிதா.

துணவியூர் நடா.

## இன்னும் சில நொடிகள் தான்

கொடி நாட்ட வந்த வீரர்களே!
உங்கள் வெற்றிக் கும்மாளம்
இன்னும் சில நொடிகள் தான்
நேரம் கணித்து வைக்கப்பட்ட
டாங்கியைத் தகர்க்கும் குண்டுகள்
உள்ளே அமைதியாக இருக்கின்றன.

பி.மதுஷ்சன், தையிட்டி.

## மௌனத்தின் தேடல்- 739



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## நெஞ்சில் ஈரமில்லாத வீரம்

கல்லும் வில்லும் கதாயுதமும் போய்
போர் விமானங்கள் யுத்த டாங்கிகள்
சண்டைக் கப்பல்கள்
நீர்மூழ்கிகள் சகிதம்
நிலம் கடல் வான் எங்கும்
போர் செய்து
அகதி முகாங்கள் ஆஸ்பத்திரிகள் கல்லூரி
ஈறாக குண்டு மழை பொழிந்து
பெண்டிர் குழந்தைகள்
அப்பாவிகளை
கொன்று, வெற்றிக்கொடி நாட்டுவது
நெஞ்சில் ஈரமில்லா வீரம்

பிரமன், கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: பலே பாண்டியா
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி



நான் என்ன சொல்லிவிட்டேன் நீ ஏன் மயங்குகிறாய்?
நான் என்ன சொல்லிவிட்டேன் நீ ஏன் மயங்குகிறாய்?
உன் சம்மதம் கேட்டேன் ஏன் தலைகுனிந்தாயோ?
உன் சம்மதம் கேட்டேன் ஏன் தலைகுனிந்தாயோ?
என்ன சொல்லிவிட்டேன் நீ ஏன் மயங்குகிறாய்?

செம்மாம்பழம் போலே கன்னம் சிவந்து விட்டதடி
கொண்ட மௌனத்தினாலே இதழ் கனிந்து விட்டதடி
செம்மாம்பழம் போலே கன்னம் சிவந்து விட்டதடி

கொண்டமௌனத்தினாலே இதழ் கனிந்து விட்டதடி
சுகம் ஊறி விட்டதடி முகம் மாறி விட்டதடி
சுகம் ஊறி விட்டதடி முகம் மாறி விட்டதடி – நெஞ்சில்
அன்றில்லாத நாணம் இன்று எங்கு வந்ததடி?
என்ன? என்ன? என்ன?

நான் என்ன சொல்லிவிட்டேன் நீ ஏன் மயங்குகிறாய்?
உன் சம்மதம் கேட்டேன் ஏன் தலைகுனிந்தாயோ?
என்ன சொல்லிவிட்டேன் நீ ஏன் மயங்குகிறாய்?

மலர்ப் பஞ்சணை மேலே
வரும் பருவம் அத்தனையும்
உன்நெஞ்சில் கொண்டாயோ

அதை நினைவில் வைத்தாயோ?
மலர்ப் பஞ்சணை மேலே வரும் பருவம் அத்தனையும்
உன்னெஞ்சில் கொண்டாயோ
அதை நினைவில் வைத்தாயோ?

கண்துயாங்குகின்றாயோ
நின்று தூங்குகின்றாயோ? – நாம்
பழகப் போகும் அழகையெல்லாம்
படம் பிடித்தாயோ?
என்ன? என்ன? என்ன?

நான் என்ன சொல்லிவிட்டேன்
நீ ஏன் மயங்குகிறாய்?
உன் சம்மதம் கேட்டேன் ஏன் தலைகுனிந்தாயோ?
என்ன சொல்லிவிட்டேன் நீ ஏன் மயங்குகிறாய்?

# இருளுக்கு பயந்த சிறுவன்...

## தன்மீது திருப்பிய உலக வெளிச்சம்..!

நடாலுக்கு சிறு வயதில் இருள் என்றால் பயம். இருளைக் கண்டு பயந்த அந்தச் சிறுவன்தான் தன்னுடைய திறனின் வழி உலகின் அத்தனை வெளிச்சங்களையும் தன்மீதாகத் திருப்பி ஒரு நிறைவான ஆட்டத்தை ஆடி முடித்திருக்கிறார்.

சிலருடைய அழுகையை, சிலருடைய பிரியாவிடையை நம்மால் மறக்கவே முடியாது.இதோ இப்போது மீண்டும் ஒரு ஜாம்பவான் தன் விடைபெறலின் நிமித்தம் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிறார். "என் கரியரில் நான் எட்டிய உயரங்களை எடுத்துக்காட்ட எவ்வளவோ ரெக்கோர்டுகள் இருக்கின்றன. ஆனால் நான் அவற்றால் நினைவுகூரப்பட விரும்பவில்லை. ஒரு நல்ல பண்பான மனிதனாக மட்டுமே நினைவுகூரப்பட விரும்புகிறேன்" என டென்னிஸ் மைதானத்தில் தனது கடைசி வரிகளை ரஃபேல் நடால் பேசியபோது ஒட்டுமொத்த விளையாட்டு உலகமுமே ஒரு நிமிடம் உறைந்து போனது.

20 வருடப் பயணம், 22 கிராண்ட் ஸ்லாம்கள், களிமண் தரையின் அரசன், டென்னிஸ் உலகம் கண்ட ஆகச் சிறந்த வீரர்களில் ஒருவர் என அத்தனை கிரீடங்களையும் நடால் கழற்றி வைத்திருக்கிறார். இனி, டென்னிஸ் மைதானங்கள் இதேபோன்ற ஒரு மாவீரனைக் கண்டடைய முடியுமா என்பதற்கான பதில் காலத்திடம்தான் இருக்கிறது. ஆனால் நடால் விட்டுச் சென்றிருக்கும் தடங்களும் அவர் கொடுத்திருக்கும் நம்பிக்கையும், யுகங்கள் கடந்தும் ரசிகர்களைப் பேச வைத்துக் கொண்டே இருக்கும்.


நடாலின் ஆட்டம், ஒவ்வொருவரும் வாழ்க்கையை எப்படி அணுக வேண்டும் என்பதற்கான பாடம். டென்னிஸ் கோர்ட்டில் அவரின் ஒவ்வொரு சரிவும் அதிலிருந்து அவர் மீளும் விதமும் அவ்வளவு உந்துதலாக இருக்கும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த அவுஸ்திரேலிய ஓப்பன் இறுதிப்போட்டி இன்னமும் நினைவில் பசுமையாக இருக்கிறது.

நடாலுக்கு மூன்று வயதாக இருக்கும்போது அவரின் சித்தப்பாவான டோனி நடால் அவரைத் தன் டென்னிஸ் பயிற்சி மையத்துக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். ரேக்கட்டைக் கையில் கொடுத்தவுடனேயே பந்துகளை நோக்கி நடால் ஓடியிருக்கிறார். அந்தத் துடிப்புதான் டோனிக்கு நடாலை டென்னிஸ் வீரனாக மாற்றும் நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது.

ஸ்பெயினில் ஒரு தேசிய அளவிலான டென்னிஸ் போட்டி. நடாலுக்கு அப்போது 14 வயதுதான். இறுதிப்போட்டிக்கு முன்பாக பயிற்சியின்போது கீழே விழுந்து அவரின் இடதுகை சுண்டு விரல் உடைந்துவிடுகிறது. தீராத வலி, ஆனாலும் நடால் இறுதிப்போட்டிக்கு வந்து நின்று அந்தப் போட்டியையும் வென்றார். டென்னிஸின் மீதான அந்தத் தீராத பிடிப்புதான் அவர் இங்கே உச்சங்களை எட்டக் காரணமாக இருந்தது.

நடால் சீனியர் லெவல் டென்னிஸுக்குள் நுழையும்போது ரோஜர் பெடரர் இங்கே நம்பர் 1 வீரர். டென்னிஸ் உலகின் புதிய கடவுளாக அவரைக் கொண்டாடினார்கள். இளம் பாலகனாக உள்ளே நுழைந்து பெடரரை வீழ்த்தி அவருக்கு ஈடாக உயர்ந்து நின்றார் நடால். இருவரும் இணைந்து கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு டென்னிஸ் உலகைக் கட்டி ஆண்டனர். நடாலின் இரண்டாம் பாதி கரியர் காயங்களால் நிறைந்திருக்கும். ஒவ்வொரு முறை காயத்தில் சிக்கும்போதும் அதிலிருந்து மீண்டு வந்து மீண்டும் ஒரு கிராண்ட்ஸ்லாமை அடித்துத் தன் இருப்பை வலுவாக நிரூபிப்பார். பெடரர் 20 கிராண்ட் ஸ்லாம்களை வென்றார். நடால் 22 கிராண்ட் ஸ்லாம்களை வென்றிருக்கிறார். இவர்கள் இருவருக்கும் இணையாக ஜோக்கோவிச் இருக்கிறார். அடுத்து வரும் தலைமுறையினரால் இந்த சாதனைகளையெல்லாம் எட்ட முடியுமா என்று தெரியவில்லை.

2004 இல் டேவிஸ் கோப்பையில் ஸ்பெயின் அமெரிக்காவை வீழ்த்தியிருக்கும் 18 வயது இளைஞனாக உலகத் தரவரிசையில் இரண்டாம் இடத்திலிருந்த ஆண்டி ராடிக்கை நடால் வீழ்த்தினார். அங்கிருந்து தான் நடாலின் சகாப்தம் தொடங்கியது. அதே டேவிஸ் கோப்பையில் தோல்வியோடு தனது கரியரை நடால் முடித்திருக்கிறார். வாழ்வின் ஒரு பகுதியின் முழுவட்டத்தை நிறைவு செய்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

426

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# தூக்கத்தின் போது சுவாசத் தடை...

உலகில் தற்போது அதிகளவானோருக்கு காணப்படும் ஒரு முக்கிய பிரச்சினையான Obstructive Sleep Apnea எனப்படும் தூக்கத்தின் போதான சுவாசத் தடை குறித்து பொதுமக்கள் பெரிதும் அறிந்திருப்பதில்லை. இது எதனால் ஏற்படுகிறது என்று பார்த்தால் சாதாரணமாக ஒருவர் சுவாசிக்கும் போது அவரது சுவாசப் பாதையின் மேற்பகுதியை வாய்க்குழி மற்றும் தொண்டைப் பகுதியில் உள்ள தசைக் கலங்கள் சீராக வைத்திருக்க உதவுகின்றன. சிலரில் அவர்கள் ஆழ்ந்த தூக்கத்திற்குச் செல்லும் போது இந்த தசைக் கலங்கள் தளர்வடைகின்றன. இதன் விளைவாக சுவாசப் பாதை ஒடுக்கமடைகின்றது. இவ்வாறு ஒடுக்கமடைந்த சுவாசப் பாதையினூடாக காற்று செல்லும் போது, அது Soft palate எனப்படுகின்ற மெல்லண்ணப் பகுதியை அதிர்வடையச் செய்கிறது. இதனாலேயே குறட்டை சத்தம் உருவாகிறது. இன்னும் சிலரில் சுவாசப் பாதை முற்றாகத் தடைப்படுவதனால் சுவாசம் நிறுத்தப்படுகிறது. இதனால், புதிய காற்று நுரையீரல்களைச் சென்றடைவது தடுக்கப்படுகிறது. இதன் விளைவாக உடலில் பிராணவாயு எனப்படும் ஒட்சிசனின் அளவு குறைவடைவதுடன் மூச்சுத் திணறல் ஏற்பட்டு தூக்கக் களைவு நிகழ்கிறது. இது தான் தூக்கத்தின் போதான சுவாசத் தடை என கூறப்படுகிறது.

இந்த தூக்கக் களைவானது நுண்ணிய தூக்கக் களைவாக இருப்பதால் பெரும்பாலானவர்களால் இதனை உணர முடிவதில்லை.

**இது ஒரு பொதுவான பிரச்சினையா? அல்லது மிக அரிதான பிரச்சினையா?..**

என்று பார்த்தால் சமூகத்தில் இருபது பேரில் அண்ணளவாக ஒன்று அல்லது இரண்டு பேருக்கு இந்த நோய் நிலைமை இருக்கலாம் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. ஆனால் பொதுமக்களிடையே இந்த நோய் நிலைமை குறித்து போதியளவு விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் பெரும்பாலானவர்களில் இந்நோய் நிலைமை கண்டறியப்படுவதில்லை.

**தூக்கத்தின் போதான சுவாசத் தடை எனும் இந்நோயின் குணங்குறிகள் என்ன? எப்போது இந் நோயை சந்தேகிக்கலாம்?**

இரவில் தூங்கும் போது சுவாசம் தடைப்படுவதால் மூச்சுத் திணறலுடன் எழுந்திருத்தல், அதிகமாக குறட்டை விடுதல், காலையில் எழுந்திருக்கும் போது புத்துணர்வில்லாமல் களைப்பாக இருத்தல், கண் எரிவு காணப்படல், தலை வலி காணப்படல், பகல் முழுவதும் எரிச்சல் மனநிலையுடன் இருத்தல். ஒரு செயற்பாட்டில் கவனம் செலுத்த முடியாத நிலை காணப்படல் போன்றவை இந்நோயின் குணங்குறிகளாக அறியப்பட்டுள்ளன. இதை விட மிக முக்கியமாக ஒருவர் பத்திரிகை அல்லது புத்தகம் வாசிக்கும் போது மற்றும் ஓரிடத்தில் ஓய்வாக அமர்ந்திருக்கும் போது அவர் தூங்கி விழும் நிலை காணப்பட்டால் இந் நோயினை நாம் சந்தேகிக்க வேண்டும்.

**இந்நோய் யாரை அதிகம் பாதிக்கின்றது?**

இந்நோயானது உடற்பருமன் கூடியவர்களையே அதிகமாகப் பாதிக்கின்றது. 70% ஆன Obstructive Sleep Apnea நோயாளிகள் உடற்பருமன் அதிகம் உடையவர்களாகவே காணப்படுகின்றனர். இதனை விட சில நோய்கள் Obstructive Sleep Apnea ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்க நோய்களாக நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், பாரிசவாதம், நீண்ட கால சிறுநீரக செயலிழப்பு, மாரடைப்பு, இருதய துடிப்பு ஒழுங்கின்மை மற்றும் ஏனைய இருதய நோய்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**இந்நோயினால் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் அசௌகரியங்களுக்கு மேலதிகமாக ஏற்படும் நீண்ட கால மற்றும் குறுகிய கால பாதிப்புகள் என்ன?**

கட்டுப்பாடற்ற நீரிழிவு, கட்டுப்பாடற்ற உயர் குருதி அமுக்கம், மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் போன்றவை நிகழ்வதற்கான வாய்ப்பு அதிகரிக்கின்றது. அதோடு, ஈரல் பாதிப்புகள், மனச்சோர்வு, மனநோய், பாலியல் செயலிழப்பு போன்றவையும் ஏற்படலாம். இதற்கு மேலதிகமாக இந்நோய் ஏற்பட்டவர்கள் பகலில் தூங்குவதனால் மற்றும் சோம்பல் தன்மையுடன் இருப்பதால், அவரின் தொழிலை இழக்க வேண்டிய நிலை ஏற்படும்.

**இந்நோய் எவ்வாறு கண்டறியப்படுகின்றது?...**

முன்பு கூறியபடி உங்களுக்கு இந்நோய்க்கான அறிகுறிகள் காணப்படும் போது, நீங்கள் வைத்தியரை நாடி அதனை தெரியப்படுத்த வேண்டும். வைத்தியர் உங்களுக்கு Sleep study எனப்படும் பரிசோதனையை செய்யுமாறு பரிந்துரைப்பார். இந்த Sleep study மூலம் உங்களுக்கு இந்நோய் உள்ளதா அல்லது இல்லையா என உறுதியாக தெரிந்து கொள்ள முடியும்.



**தூக்கத்தின் போதான சுவாசத் தடை எனும் நோயினை நிவர்த்தி செய்ய ஏதேனும் சிகிச்சை முறைகள் உள்ளனவா?**

பெரும்பாலானவர்களுக்கு C PAP அல்லது AUTO PAP எனும் சிகிச்சை முறைகள் மிகச்சிறந்த பலனை அளிக்கின்றன. இந்த சிகிச்சை முறையில் முகம் அல்லது வாய், மூக்குப் பகுதியைச் சுற்றி இடப்படுகின்ற ஒரு வகை மாஸ்கின் மூலம் காற்றமுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது.

இந்த காற்றமுத்தம், சுவாசப் பாதையிலுள்ள தசைக்கலங்களைச் சரிவடைய விடாமல் தடுப்பதால், சுவாசத்தடை, மூச்சுத் திணறல் மற்றும் தூக்கக் களைவு ஏற்படாமல் தடுக்கிறது. இந்த சிகிச்சை முறையைப் பயன்படுத்தி சில நாட்களிலேயே அதன் பலன்கள் வெளிப்பட ஆரம்பிக்கின்றன. இந்த சிகிச்சை முறைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் இரவில் தூங்கும் போது குறட்டை விடுவது நிறுத்தப்படும். இரவில் நன்றாகத் தூங்கி காலையில் எழும் போது புத்துணர்வாக காணப்படும். பகலில் தூங்கி விழும் தன்மை குறைவடையும், அவர்களது வாழ்க்கையும் தரம் மேம்படுவதுடன் அவர்களின் வினைத்திறன் அதிகரிக்கும். இதனை விட அவர்களது தொற்றா நோய்களான நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் என்பன கட்டுப்பாட்டிற்குள் வரும். அதோடு இதய நோய்கள், இதயத்துடிப்பு ஒழுங்கின்மை, மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் போன்றவை ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் குறைவடையும்.

இந்தச் சிகிச்சை முறைகள் பொருந்தாதவர்களுக்கு சிலவகை சத்திரசிகிச்சைகள் மூலம் தீர்வினைப் பெற்றுக் கொள்ளலாம். இதனை விட தாடை எலும்பு முன்னேற்று உபகரணங்கள் சிலருக்கு நன்மை பயக்கும்.

இது பற்றிய மேலதிக விளக்கங்களை Srilankan col lege of pulmonogist இன் Sleep எனும் இணையத்தளத்தினூடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.


Dr. M. ஆதவன்
சுவாச நோய் வைத்தியநிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமபிதா காட்டிய பாதை

### திருவருகைக் காலத்தில் தெய்வீக திருவார்த்தைக்கு திரும்புவோம்



திருவருகைக் காலத்தின் முதலாவது ஞாயிறு இன்று. கத்தோலிக்க திருச்சபை தனக்கென ஒரு திரு வழிபாட்டு ஆண்டை கொண்டுள்ளது. அதன்படி நேற்றோடு அந்த ஒரு வழிபாட்டாண்டை நிறைவு செய்து புதிய ஒரு வழிபாட்டு ஆண்டை இன்றோடு தொடங்குகிறது. அந்த வழிபாட்டு ஆண்டில் முதல் நான்கு வாரங்களும் திருவருகைக்காலம் என்று அழைக்கப்படும்.

இறைவன் தன் தெய்வீக மகிமையையிலிருந்து நம்மைப் போல் மனிதனாக உடலெடுத்த எம்மிடம் வந்த நினைவுகளை நம்மில் தட்டியெழுப்புவதாக வரும் இக்காலத்தை திருவருகைக் காலம் என்று கூறப்படும். கடவுளின் வருகையை, உலகில் அவரது உடனிருப்பைக் குறித்து நிற்கும் இத்திருவருகைக்காலம் தன்னகத்தே இரண்டு அம்சங்கள் உள்ளடக்கி உள்ளது: இயேசு கிறிஸ்துவின் முதல் மற்றும் இரண்டாம் வருகை, இயேசுவின் பிறப்பு நம் உள்ளங்களில் நிகழவேண்டும் என்பதாகும். இறைவன் இல்லாமை போன்றும் கடவுள் நம்மை கைவிட்டு விட்டார் போன்றும் தோன்றும் இன்றைய நவீன உலகில், திருவருகைக் காலம் என்பது மேலும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளது. இறை அன்பிலிருந்து வெளிப்படும் மீட்பு எனும் மறையுண்மையைத் திறந்த மனதுடன் ஏற்றவர்களாக, அனைவரும் ஒரு சமூகமாக வாழ்ந்து விசுவாசத்தின் புதிய பயணத்தைத் தொடர இத்திருவருகைகாலம் எமக்கு அழைப்பு விடுக்கிறது.

கடவுளை விலக்கி வைத்து மனிதனே அனைத்திற்கும் தலைவன் என்பது போன்ற ஒரு மாயை இன்றைய உலகில் உருவாக்கப்பட்டுள்ளது. நாம் எம்மைப்பற்றிய சிந்தனையிலே மூழ்கியிருக்கிறோம் இன்று. எம்முடைய சுகம், எம் இன்பம் இவைகளைப் பற்றியே எண்ணமாக உள்ளோம். உண்பதும் உடுப்பதும், குடிப்பதும் கும்மாளமடிப்பதும், பெண் கொள்வதும் கொடுப்பதும் மற்றவர்களின் வாழ்க்கைத் துணையுடன் பாலியல் லீலைகளில் திழைப்பதும், வாழ்க்கை என வாழ்ந்து நோவா காலத்து வெள்ளப் பெருக்குக்கு முந்திய காலத்திய பாவ வாழ்க்கை வாழ்கின்றோம்.

பைபிளில் பழைய ஏற்பாட்டு நூலின்படி அன்று நோவாவின் காலத்தில் மக்கள் கடவுளை மறந்து, குடிவெறி, களியாட்டம், போன்ற நிகழ்வுகளில் தொடர்ந்து கொண்டதினால் பெரும் வெள்ளப் பெருக்கால் நோவா குடும்பத்தாரைத் தவிர அனைவரும் அழிந்து போனார்கள்.

இதேபோலவே இன்று எமக்குத் தரப்படும் பைபிள் பகுதி கூறுகிறது: "நோவாவின் காலத்தில் இருந்தது போலவே மானிடமகன் -இயேசுவின் - இரண்டாம் வருகையின் போதும் இருக்கும்." என்று புதிய ஏற்பாட்டு நூலின் லூக்கா புத்தகத்தின் 21:25-28 பகுதியில் கூறுகிறது.

எனவே இங்கு நோவா காலத்துடன் ஏன் இயேசு இரண்டாவது வருகை ஒப்பிடப்பட்டிருக்கிறது என்று நாம் கேள்விகளை கேட்கலாம். கடவுளை விட்டு விலகி இருந்த மக்கள் வெள்ளப் பெருக்கால் அழிக்கப்பட, கடவுளோடு இருந்த நோவாவையும் அவர் குடும்பத்தாரையும் கடவுள் தப்பிக்கச் செய்ததைக் காண்கின்றோம். இப்படியே இன்றும் கடவுளை விட்டு விலகி இருப்போர் அழிக்கப்பட கடவுளோடு இருப்பவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்பதை இயேசு எடுத்துக் கூறுகின்றார்.

நாம் வாழும் இந்த உலகில் அடிக்கடி அடுத்தவர்களுக்கு அநியாயங்கள் செய்கின்றோம். சாபங்களையும், அருவருப்பான மொழிகளையும் பிறரைப் பற்றி இல்லாத பொல்லாத விடயங்களை மோசமாகப் பேசுகின்றோம். இது மனிதத்தை விதைப்பதற்குப் பதில் பிணக்குகளை விதைக்கின்றன. புறங்கூறுதலால் மனித மாண்புகள் நஞ்சூட்டப்படுகின்றன. நாம் அழிவுக்கு உள்ளாக்கப்படுகின்றோம்.

இயேசுவின் இரண்டாவது வருகையில் ஒரு புது யுகம் பிறக்கும் அதற்காக அனைவரும் மனம் மாறி ஆயத்தமாக இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றோம். இறையரசு விரைவில் முழுமைபெற அன்பின், நீதியின், அமைதியின் அடிப்படையில் அமைந்த ஒரு யுகம் மலர்ந்திட பாவவழியை விட்டு இறைவழியில் செல்ல நாம் அழைக்கப்படுகின்றோம்.

இறை பிரசன்னம் இல்லாத எம் வாழ்வு பாலைநில வரட்சிக்கு ஒப்பிடப்படுகிறது. கடவுளின் உடனிருப்பு என்பது ஓர் ஆயன் தன்னுடைய ஆடுகளை அரவணைத்து தன் தோளில் சுமந்து செல்வதைப் போல் நெருக்கமான உறவாக சித்தரிக்கப்படுகிறது.

மனமாற்றம் நிகழும் போதுதான் இயேசுவிடம் ஆழமான உறவை உருவாக்கி அர்த்தமுள்ள வகையில் வாழலாம். இந்த திருவருகைக் காலத்தில் இறையருள் பெற்று வாழ்வோம்.


ம.பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவராக சந்திரசேகர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் மற்றும் உத்தரவின் பேரில் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நேற்று முதல் அமுல்படுத்தப்படும் வகையில் பாராளுமன்ற உறுப்பினரும், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி விடயம் பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் ஏ. எச்.எம்.எச். அபயரத்னவினால் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கு பிரதியிடப்பட்ட



கடிதம் மூலம் அறியத்தரப்பட்டுள்ளது. (நி-8-33)

## வவுனியா வைத்தியசாலையில் ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையில் முதன் முறையாக ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள் பிரசவிக்கப்பட்டுள்ளன.

பதவியாவைச் சேர்ந்த கர்ப்பவதியொருவர் நேற்று முன்தினம் இரவு பிரசவ வலியுடன் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவரிற்கு சிசேரியன் அறுவைச் சிகிச்சை மூலம் 4 குழந்தைகள் பிரசவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வவுனியா வைத்தியசாலையில் நான்கு குழந்தைகள் ஒரே பிரசவத்தில் பிரசவிக்கப்படுவது இதுவே முதன் முறையாகும். மேற்படி தாயாரும் குழந்தைகளும் நலமாகவுள்ளதுடன், நான்கு குழந்தைகளும் சிறப்பு குழந்தை நலப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. (நி-8)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 04.12. 2024ஆம் திகதி புதன் கிழமை மாலை 3.30 மணிக்கு மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான், முருகப்பெருமான் திருவீதி வலம் வரும் காட்சி இடம்பெறும் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (நி-8)

## பசுமாட்டை இறைச்சியாக்கி விற்ற இருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் அமைந்துள்ள பொது நூலக வளாகத்திற்குள் வைத்து பசுமாட்டை இறைச்சியாக்கி விற்ற இருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த புதன்கிழமை பொது நூலகத்திற்கு அருகில் உள்ள காணியில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்த பசுமாட்டை நூலக ஊழியர் திருடி மற்றொரு நபரின் உதவியோடு நூலக வளாகத்திற்குள் வைத்து இறைச்சியாக்கி விற்றுள்ளார்.

இந்நிலையில் மாட்டின் உரிமையாளர் மாட்டினை தேடிய போது இறைச்சியாக்கப்பட்ட மாட்டின் உடல் அங்கங்கள் நூலகத்தை அண்மித்து காணப்பட்டுள்ளன.

இதனையடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் நூலக ஊழியரையும் மற்றொரு நபரையும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்ததுடன் விற்கப்பட்ட இறைச்சியின் ஒரு பகுதி மற்றும் சமைத்த இறைச்சி ஆகியவற்றையும் மீட்டுள்ளனர். (நி-8-30)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 300 | 400 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 350 | 600 | 400-450 | 400 |
| தக்காளி | 600 | 400 | 400-450 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 100-150 | 160 |
| கோவா | 240 | 250 | 250 | 320 |
| கரட் | 300 | 300 | 250 | 320 |
| பூசணி | 120 | 150 | 100 | 200 |
| புடோல் | 250 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 80 | 150 | 60-70 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 320 | 300 | 360 | 400 |
| பாகற்காய் | 900 | 1000 | 700 | 2000 |
| வெண்டக்காய் | 220 | 200 | 250-280 | 400 |
| கருணைக் கிழங்கு | 140 | 180 | 120 | 200 |
| பயற்றங்காய் | 1200 | 600 | 1000 | 800 |
| லீக்ஸ் | 350 | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 350 | 250 | 150 | 400 |
| கறிமிளகாய் | 650 | 800 | 500 | 1000 |
| முருங்கைக்காய் | 1600 | 1000 | 800 | 800 |
| போஞ்சி | 600 | 600 | 450 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 140 | 150 | 100 | 200 |
| தேசிக்காய் | 600 | 700 | 400-500 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 150 | 80-170 | 120-180 |
| இராசவள்ளி | 900 | 1000 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | -- | 600 | -- | -- |
| முள்ளங்கி | 90 | 200 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 80 | 120 | 100 |
| ஈரப்பலா | 120 | 100 | 80 | 150 |

## மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக் கிழமை தொடக்கம் வெள்ளிக் கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே.ஆர்.முனிரத்தினம் வழங்குவார். (தொடர்புகளுக்கு 021 222 2772, 076 857 1395) (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்மோட்டார் திருடியவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் பகுதியில் தோட்டக் காணி ஒன்றில் இருந்து மின் மோட்டார் திருடிய நபர் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தோட்டக் காணியில் இருந்து ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் பெறுமதியான மோட்டார் திருடப்பட்டிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை அடிப்படையாக கொண்டு பொலிஸார் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்ததுடன்திருடப்பட்ட மோட்டாரையும் மீட்டுள்ளனர். (நி-8-30)

## நினைவு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களின் 60 ஆவது நினைவு தின நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் க.மகாதேவன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான ந.திருலிங்கநாதன் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் கி.சந்திரசேகரன், கௌரவ விருந்தினர்களாக யா.மா.கால்நடை வ.கூ.ச. சமாசத் தலைவர் அன்ரன் கரிஸ்ரர் ஸ்ரீபன், யா.மா. விவசாய நுகர்ச்சி கூ.ச. சமாசத் தலைவர் மா.செல்வராசா, யா.மா. ப.தெ.வ. அ.கூ.ச.சமாசத் தலைவர் செ.செல்வராசா, யா.மா.சி.ச. வ. கூ.சமாசத் தலைவர் திருமதி. ச.பரமானந்தன், யா.மா. கடற்றொழிலாளர் கூ.சமாசத் தலைவர் அ.மரியதாஸ் ஆகியோர் கலந்து கொள்வதுடன் நினைவுப் பேருரையினை யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் வி.காண்டீபன் வழங்கவுள்ளார். (நி-8)


# வேலணை பிரதேச சபை
# பொது அறிவித்தல் -2025

1. கட்டட அனுமதி வழங்கலும் அமைவுச்சான்றிதழினைப் (COC) பெற்றுக்கொள்ளுதலும

- வேலணை பிரதேச சபையின் நிர்வாக பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் வேலணை பிரதேச சபையின் அனுமதிப் பத்திரமின்றி கட்டடங்களை புதிதாகவோ மீள திருத்தவோ அல்லது பழுதுபார்க்கவோ முடியாது என்பதுடன் தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள், எல்லைத்தூண்கள், கிணறுகள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேச சபையில் கோரப்படும் ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னரே குறித்த கட்டுமானங்களை அமைத்தல் வேண்டும். அவ்வாறு உரிய அனுமதிப் பத்திரம் பெறப்படாதுவிடின் பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளிற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- புதிய கட்டடம் அமைப்பதற்கோ பழைய கட்டடத்தினை புனரமைப்பதற்கோ அனுமதிப்பத்திரம் பெறப்பட்டு குறித்த பத்திரம் பெற்ற திகதியில் இருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட வேண்டும் அவ்வாறு உரிய அனுமதிப்பத்திரம் பெறப்படாதுவிடின் பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளிற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- எந்த நோக்கத்திற்காக கட்டட அனுமதி பெறப்பட்டு கட்டடம் அமைக்கப் பட்டதோ அந்த நோக்கத்திற்கேற்ப பூரணப்படுத்தப்பட்டு பிரதேச சபையின் அந்தந்த உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடைமுறைகளைப் பின்பற்றி கட்டட அமைவுச் சான்றிதழினைப் (COC) பெற்றுக் கொண்ட பின்னர் குறித்த கட்டடத்தை பயன்படுத்தல் வேண்டும் அவ்வாறு உரிய அனுமதி பத்திரம் பெறப்படாதுவிடின் பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளிற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2. பட வரைஞர்களை பதிவு செய்தல்

- 2025 ஆம் ஆண்டு வேலணை பிரதேச சபையின் நிர்வாக பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் கட்டட அனுமதிக்கான கட்டட வரைபடங்களை வரைய விரும்பும் படவரைஞர்களில் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்தோர் மற்றும் புதிதாக பதிவு செய்ய விரும்புவோர் 2024.12.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் மேற்குறித்த பதிவுகள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிபந்தனைகளுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்படும்.
- வேலணை பிரதேச சபையில் மேற்குறித்த பதிவினை மேற்கொள்ளத்தவறிய அல்லது புதுப்பிக்கத்தவறிய எந்தவொரு கட்டட படவரைஞர்களும் 2025 ஆம் ஆண்டு வேலணை பிரதேச சபையின் நிர்வாக பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் கட்டட படவரைஞராக செயற்படலாகாது.

3. ஒப்பந்தகாரரைப் பதிவு செய்தல்

- 2025 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப் பொறியியல் வேலைகளை செய்து வழங்குவதற்கு தேசிய நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பதிவை வைத்திருக்கும் ஆர்வமுடைய மனுதாரர்கள் பதிவை மேற்கொள்ள முடியும்.

4. வழங்குனரைப் பதிவு செய்தல்

- 2025 ஆம் ஆண்டில் சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்ள விரும்பும் தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன எனவே பதிவுகளினை மேற்கொள்ள விரும்புவோர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 2024.12.31 ஆம் திகதி வரை பதிவுகளினை மேற்கொள்ள முடியும்.

5. துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகங்களுக்கான உரிமத்தை பெற்றுக் கொள்ளுதல்

- துவிச்சக்கரவண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2025.03.31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2025 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி, வளர்ப்பு நாய்களுக்கான உரிமங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

6. விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல் (02.02.2016 ஆம் திகதிய வடக்கு மாகாண சபையின் நியமத் துணை விதி)

- பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் / காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு 2025.03.31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணத்தினை செலுத்தி (நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டண ஏற்பாடுகளிற்கு அமைய) சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத சகல விளம்பர பதாதைகளும் உரிய நிலையத்திலிருந்து 2025.03.31 ஆம் திகதிக்கு பின்னர் அகற்று வதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. வீதி எல்லைக்கோடு / ஆதன உரிமை / காணி சுவீகரிக்கப்படாமைக்கான சான்றிதழ் பெற்றுக்கொள்ளுதல்

- வேலணை பிரதேச சபையின் நிர்வாக பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் குறித்த சான்றிதழ் பெற்றுக்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவத்தை மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்வதோடு கோரப்படும் ஆவணங்களை சமர்ப்பிப்புதுடன் உரிய கட்டணத்தை செலுத்தி குறித்த சான்றிதழினை பெற்றுக்கொள்ள முடியும்.

8. உப பிரிவிடல் அல்லது காணி ஒருங்கிணைப்பு அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக்கொள்ளலும் அமைவுச் சான்றிதழினைப் (COC) பெற்றுக்கொள்ளுதலும்

- வேலணை பிரதேச சபையின் நிர்வாக பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் வேலணை பிரதேச சபையின் அபிவிருத்தி அனுமதிப் பத்திரமின்றி உப பிரிவிடல் அல்லது காணி ஒருங்கிணைப்பு அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபடமுடியாது என்பதுடன் உரிய விண்ணப்பப் படிவத்தை மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய உப அலுவலகங்களில் பெற்று கோரப்படும் ஆவணங்களை சமர்ப்பிப்பதோடு உரிய கட்டணத்தை செலுத்தி குறித்த அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்பதுடன் உரிய அனுமதிப்பத்திரம் பெறப்படாதுவிடின் சட்ட ஏற்பாடுகளிற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- உப பிரிவிடல் அல்லது காணி ஒருங்கிணைப்பிற்கான அமைவுச் சான்றிதழினை அந்தந்த உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடைமுறைகளைப் பின்பற்றி உரிய கட்டணத்தை செலுத்தி குறித்த சான்றிதழினை பெற்றுக்கொள்ள முடியும்.

9. வியாபார உரிமம்/ வியாபார வரி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளுதல்

- இப் பிரதேசசபை எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை அந்தந்த உப அலுவலகங்களில் 2025.01.15 ஆம் திகதிக்குள் பெற்று உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து குறித்த கட்டணங்களை 2025.03.31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade License) பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு 2025.03.31 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் மீது பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளிற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெற்றுக்கொள்ளுதல்

- வேலணை பிரதேச சபையின் நிர்வாக பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் 1948 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம் 23அ எனும் பிரிவின் கீழாக கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் 2264/18 ஆம் இலக்க 2022.01.27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் "ஈ" பகுதியில் குறிப்பிடப்பட்ட வியாபார அல்லது தொழில்களுக்கு வேலணை பிரதேச சபையின் சூழல் பாதுகாப்பு உரிமத்தினை பெற்றுக்கொள்ளாது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது என்பதுடன் உரிய விண்ணப்பப்படிவத்தை மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய உப அலுவலகங்களில் பெற்று கோரப்படும் ஆவணங்களை சமர்ப்பிப்பதோடு உரிய கட்டணத்தை செலுத்தி குறித்த உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டுமென்பதுடன் உரிய அனுமதிப்பத்திரம் பெறப்படாதுவிடின் பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளிற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. வீதி ஒழுங்கும், தெருவோர வியாபாரமும்

- வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடத்துமாறு வர்த்தகநிலைய உரிமையாளருக்கு அறியத்தருகின்றேன்.
- சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.

12. கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல்.

- சபை எல்லைக்குள்ளாக ஏதேனும் பொது வழி மீது அல்லது ஏதேனும் பொது வழி அருகில் கால்நடைகள் கட்டப்படவோ அல்லது அலைந்து திரியவோ விடாது கால்நடைகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும் என்பதோடு கட்டி வளர்க்காது ஏதேனும் பொது வழி மீது அல்லது ஏதேனும் பொது வழி அருகில் கால்நடைகள் காணப்பட்டால் சபையினால் பிடிக்கப்பட்டு பிரதேச சபைகள் சட்டத்திற்கமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

13. சபையினால் அறவிடப்படும் கட்டண விபரங்கள்

- 2025 ஆம் ஆண்டுக்கான பிரதேச சபையின் வர்த்தமானி அறிவித்தலிற்கு அமைவாகவும், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் கட்டண விதிப்புக்களிற்கு அமைவாகவும், சபையினால் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் கட்டண மாற்றங்களுக்கு அமைவாகவும் எல்லா அறவீடுகளும் சபையினால் மேற்கொள்ளப்படும்.

14. சனசமூக நிலையங்களின் பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவினை நடாத்துதல்

- வேலணை பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களும் 2025 ஆம் ஆண்டிற்குரிய நிர்வாகத்தெரிவு மற்றும் பொதுக்கூட்டங்களை நடாத்துவதுடன் அவற்றின் அறிக்கைகள், கணக்கறிக்கை மற்றும் செயற்பாட்டறிக்கைகளை பிரதேச சபைக்கு அனுப்பி வைப்பதோடு குறித்த அறிக்கைகள் பிரதேச சபையில் கிடைப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

15. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்

- திண்மக் கழிவுகளை பிரதேச சபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம் பிரித்து வழங்க வேண்டும் என்பதுடன் திண்மக் கழிவுகள் பொது இடங்களில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்பட வேண்டும். அல்லாத விடத்து பிரதேச சபைச் சட்ட ஏற்பாட்டிற்கு அமைவாக பிரதேச சபையால் தன்னுரித்தாக்கப்பட்டு துப்பரவு செய்யப்படும்.

16. பொதுச் சுகாதாரத்தை பேணுதல்

- உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்.

தொடர்புகளிற்கு :-
தலைமை அலுவலகம்
பொது:- 021 221 0180 : செயலாளர்:- 021 221 1506
தொலை நகல்:- 021 221 1506
மின்னஞ்சல் :-velanaips@gmail.com

இணையம்:- www.velanai.ps.gov.lk
உப அலுவலகங்கள்
மண்டைதீவு :- 021 222 6650 : அல்லைப்பிட்டி :- 021 300 3805 : வேலணை :- 021 300 3804
புங்குடுதீவு :- 021 320 2299 : நயினாதீவு :- 021 300 6238

[illegible],
செயலாளர்,
வேலணை பிரதேச சபை.

திகதி:- 01.12.2024

(சி-1686)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை எண்ணியே வருந்தி தளர்ந்து விடாமல் நல்லவைகளை செய்ய எழுந்து நடைபோடுவதே சிறப்பம்சமாகும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எட்டுத்திக்கெல்லாம் சென்று வாரீர் வெள்ளம் அடைபட்ட இடத்தைக் கண்டு வாரீர்

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு எனக் கூறிய வள்ளுவர், அனுபவத்தைக் கூற மறந்தாரா? என்றால் இல்லை.

உண்மையில் அறிவு என்பது கல்வி அறிவையும் பட்டறிவையும் உள்ளடக்கியது.

எனினும் நாம், அறிவு என்பதை கற்றல் மூலம் கிடைக்கின்ற அறிவு எனப் பொருள் கொண்டதால், கற்றவர்கள் கர்வம் கொள்ளலாயினர்.

உதாரணமாக பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் பட்டம்பெற்று வந்துவிட்டால், எல்லாம் எமக்குத் தெரியும் என்ற நினைப்பு என்று நம்மை ஆட்கொண்டதோ அன்றுதான் எம் தமிழினத்துக்குக் ஆபத்து வந்துற்றது.

உண்மை. வள்ளுவன் கூறுகின்ற அறிவுடைமை கல்வியறிவையும் அனுபவ அறிவையும் உள்ளடக்கியது.

அதாவது ஓர் ஊரில் வீதி அமைப்பதாக இருந்தால்; கற்றறிந்த பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோத்தர்களுடன் அந்த ஊரில் இருக்கக்கூடிய பெரியவர்கள் – அனுபவசாலிகள் என எல்லோரும் சேர்ந்து குறித்த வீதி நிர்மாணிப்புத் திட்டத்தை வரைவு செய்ய வேண்டும்.

எனினும் கற்றறிந்த புதியவர்கள் எல்லாம் தமக்குத் தெரியும் என்ற கர்வத்தோடு வீதி தொடர்பான அத்தனை தீர்மானங்களையும் எடுத்துவிட, அங்கிருக்கக்கூடிய பழுத்த அனுபவசாலிகள், பட்டறிவின் முதிர்ச்சி கொண்ட பெரியவர்கள் தாமாக ஒதுங்கிக் கொண்டனர்.

ஆக, ஏட்டில் எழுதியதை அப்படியே அமுலாக்கிவிட, வீதிகள் உயர்ந்து வீடுகள் பதிந்து வெள்ளத்தைச் சேகரிக்கின்ற வாசஸ்தலங்களாக எங்கள் இல் இடங்கள் மாறிப் போயின.

பரவாயில்லை. இருளைக் குறை கூறி என்ன பயன். ஒளியை ஏற்றுவோம்.

ஆம், வட மாகாணத்தில் எங்கெல்லாம் வெள்ளம் குடிமனைகளுக்குள் புகுந்து அந்த மக்களை அந்தரிக்க வைத்ததோ அந்த இடங்கள் அனைத்தையும் அந்தந்த உள்ளூராட்சி அமைப்புகளும் பிரதேச செயலகங்களும் வீதிகள் மற்றும் பாலங்களை நிர்மாணிக்கும் அமைப்புகளும் ஒரு குழுவாகச் செயற்பட்டு நேரில் சென்று கள ஆய்வு செய்ய வேண்டும்.

இதற்கு மேலாக, வடக்கு ஆளுநர் மாவட்டச் செயலர் உள்ளிட்ட கட்டமைப்பினர் இந்தத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைப்பது அவசியம்.

அந்த அங்குரார்ப்பண நிகழ்வு வெள்ள வடிகாலை மூடி அமைக்கப்பட்ட கட்டடத்தை உடைப்பதாக, மழை வெள்ளம் வழிந்தோடுவதற்கு ஏற்ப சுற்றுமதில் சுவர்களில் துளை இடுவதாக, குளங்களை ஆழப்படுத்தி புனரமைப்பதாக இருக்க வேண்டும்.

இதைத் தொடர்ந்து அத்தனை குழுக்களும் எட்டுத்திக்கும் சென்று எங்கெங்கு மழை வெள்ளம் அடைபட்டதோ அவற்றையெல்லாம் கவனித்தாக வேண்டும்.

இதை இக்கணமே செய்தால், அடுத்த ஆண்டில் இருந்து மாரி காலத்தில் மக்கள் நிம்மதியாக தத்தம் வீடுகளில் மகிழ்வோடு இருப்பர்.

தேவை ஏற்படின் பொலிஸாரின் உதவியைப் பெறவும் நீதிமன்றத்தை நாடவும் ஆளுநர் உள்ளிட்ட அரச நிர்வாகம் தயங்கக்கூடாது.

# வடக்கில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான ஊக்குவிப்பு வழங்கப்பட வேண்டும்

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கான ஊக்குவிப்புக்கள் கடந்த காலங்களில் வழங்கப்பட்டிருந்தாலும் அவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களுக்கு தொடர்ச்சியான ஊக்குவிப்பும், கண்காணிப்பும் இருக்க வேண்டும். அதன் ஊடாக தேசிய மொத்த உற்பத்திக்கான வடக்கு மாகாணத்தின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்ய முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தொழில் முயற்சியாண்மை, ஆய்வு மற்றும் முன்னெடுப்புகளுக்கான "கேட்" நிறுவனத்தின் அனுசரணையுடன், யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீட வியாபார மேம்பாட்டு இணைப்பு அலகின் ஏற்பாட்டில் நடைபெற்ற "வடக்கு மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகளுக்கான வாய்ப்புக்களைத் திறத்தலும், தந்திரோபாய ஈடுபாடும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் விருந்தினர்களுள் ஒருவராக இணைய வழியில் பங்கேற்று உரையாற்றுகையில் ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆளுநர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

"முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களின் மாவட்ட செயலராக நான் பணியாற்றிய காலத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை மேம்படுத்த பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆனால், அவை தொடர்ச்சியாக நடைபெறவில்லை.

போருக்கு முன்னர் எமது வடக்கு மாகாணத்தில் பல தொழிற்சாலைகள் இருந்தன. போர் மற்றும் அதன் பின்னரான இடப்பெயர்வுகளால் அவை அழிவடைந்துள்ளன.

போரின் பின்னர் வடக்கு மாகாணத்தில் வேலைவாய்ப்பு மிக முக்கிய பிரச்சினையாக தோற்றம் பெற்றிருக்கின்றது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரைப் பலப்படுத்துவதன் ஊடாக வேலைவாய்ப்பு தொடர்பான பிரச்சினைக்கு ஓரளவு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

இத்தகைய தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களான நிதி மூலத்தை அடையாளம் காணுதல், அவர்களின் தொழில் முயற்சிகளை அடுத்த தளத்தை நோக்கி விரிவாக்குவதற்குரிய ஆலோசனைகள் என்பன இருக்கின்றன.

அவற்றை இப்படியான கருத்தரங்குகள் மூலம் வழங்குவதற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் எடுக்கின்ற முயற்சி வரவேற்கத்தக்கது.

இவற்றுக்கு அப்பால் இத்தகைய தொழில்முனைவோர் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இல்லாமல் இருக்கின்றன.

கண்காட்சிகள் நடத்தப்படும்போது அங்கு கொண்டு வந்து தமது பொருட்களை சந்தைப்படுத்தும் நிலைமையே இருக்கின்றது. அவர்களுக்கு தொடர்ச்சியான சந்தை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க மாகாணசபை ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் பல முதலீட்டாளர்கள் வடக்கை நோக்கி வரத் தொடங்கியுள்ளார்கள்.

இது சாதகமான மாற்றம். இதைப் பயன்படுத்தி தேசிய உற்பத்திக்கான வடக்கின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்ய வேண்டும். அதேநேரம் எமது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கும் தொடர் ஊக்குவிப்புக்களை வழங்கி அவர்களையும் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்த வேண்டும். இதன் ஊடாக புதிதாக இளம் தொழில்முயற்சியாளர்களையும் உருவாக்க முடியும்" என்றார். (ம-7)

# அநுர தலைமையிலான அரசுக்கு ஆதரவு வழங்கத் தயார்

## சாணக்கியன் எம்.பி தெரிவிப்பு

ஜனாதிபதி மற்றும் தற்போதைய அரசாங்கம் எடுக்கும் சரியான தீர்மானங்களுக்கு தமது கட்சி ஆதரவளிக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது மதிப்பாய்வில் எட்டப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் நாட்டிற்கு 300 மில்லியன் டொலர்கள் கிடைக்கும், இது நாட்டுக்கு மிகவும் நல்லது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை ஜனாதிபதி உரிய முறையில் நிர்வகித்து வருவதாகவும் அது சாதகமான அறிகுறி எனவும் சாணக்கியன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, ஜனாதிபதி மேற்கொள்ளும் நாட்டிற்கு முக்கிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க தமது கட்சி தயாராகவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மரத்திலிருந்து விழுந்த 12 வயது சிறுமி மரணம்

(திருகோணமலை)

திருகோணமலை - கிண்ணியாவில் மரத்திலிருந்து விழுந்து சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயிலிடி பிரதேசத்தைச் சேர்ந்த, வான்எல புகாரி நகர் வித்யாலயத்தில் தரம் ஆறில் கல்வி கற்றுவரும் 12 வயதான ரிஷ்வான் பாத்திமா ரிப்கத் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சிறுமி, தனது வீட்டு முற்றத்தில் உள்ள மாமரத்தில் மாங்காய் பறித்துக் கொண்டு இருந்த போது, தவறி விழுந்து தலையில் காயம் ஏற்பட்ட நிலையில் உயிரிழந்ததாக உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். (ம-7)

# மின்சாரம் தாக்கியதில் நபரொருவர் மரணம்

ஹாலிஎல-தீகல்ல பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி நபரொருவர் உயிரிழந்துள்ளதாக ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்த நபர் ஹாலிஎல-திகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடையவர் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவதினமான நேற்று முன்தினம் விலங்குகளிடமிருந்து விவசாய நிலத்தை பாதுகாப்பதற்காக, அருகில் உள்ள வீடொன்றில் இருந்து சட்டவிரோதமாக பெறப்பட்ட மின்சார கம்பியில் சிக்கியே சந்தேக நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# ரூ.6 கோடி பெறுமதியான சொத்து கொள்ளை

## தேரர் உள்ளிட்ட 9 பேர் கைது

(கொழும்பு)

ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி, 6 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான நீல மாணிக்கக் கல், தங்கப் பொருட்கள் மற்றும் பணம் திருடப்பட்டமை தொடர்பில் 9 பேர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த நவம்பர் 10ஆம் திகதி லக்கல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பிலேயே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் தேரர் ஒருவரும் அடங்குவதாகத் தெரியவருகிறது. (ம-7)

# யானை தாக்கியதில் பெண் ஒருவர் பலி

கலென்பிந்துனுவெவ-மஹசென்கம பிரதேசத்தில் காட்டு யானை தாக்கியதில் 69 வயதான பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த பெண் அநுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாத இராசி பலன்கள்-2024

## மதிப்பும் மரியாதையும் கூடும்



**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் குரு (வ) - சுக ஸ்தானத்தில் செவ்வாய் - ரண ருண ரோக ஸ்தானத்தில் கேது - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சந்திரன் - பாக்கிய ஸ்தானத்தில் சுக்கிரன் - இலாப ஸ்தானத்தில் சனி - அயன சயன போக ஸ்தானத்தில் ராகு என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 03-12-2024 அன்று சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார் : 15-12-2024 அன்று சூரியன் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார் : 30-12-2024 அன்று சுக்கிரன் தொழில் ஸ்தானத்தில் இருந்து இலாப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** மேஷ இராசியினரே... இந்த மாதம் பணவரத்து அதிகமாகி பொருளாதாரம் ஓங்கும். முயற்சிகள் சாதகமான பலன் தரும். இராசிநாதன் செவ்வாய் சனியைப் பார்ப்பதால் சுதந்திர எண்ணம் உண்டாகும். சின்ன சின்ன விடயங்களில் கூட மனநிறைவு ஏற்படும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் தங்கள் வியாபாரம் தொடர்பாக பயணம் செல்ல நேரிடலாம். போட்டிகள் விலகும். வாடிக்கையாளர்கள் கருத்துக்கு மாற்று கருத்து சொல்லாமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். பண வரத்தும் திருப்தி தரும். மேலிடத்தில் இருந்து உங்களுடன் நல்ல அனுகு முறை நீடிக்கும்.

குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். வார்த்தைகளில் நிதானத்தை கடைபிடிப்பது மற்றவர்களிடம் கருத்து வேற்றுமை ஏற்படாமல் தடுக்கும். வாழ்க்கை துணையின் நலனில் அக்கறை காண்பிப்பீர்கள். பெண்களுக்கு பணவரத்து அதிகமாகி பொருளாதாரம் ஓங்கும். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். சின்ன விடயங்களைக் கூட கவனமாக செய்வீர்கள்.

கலைத்துறையினர் தேவையான பொருட்களை வாங்குவீர்கள். நீண்ட நாட்களாக செய்ய நினைத்த ஒரு காரியத்தை செய்து முடிப்பீர்கள். மதிப்பும், மரியாதையும் கூடும். அரசியல் துறையினருக்கு வீண் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். நண்பர்களிடையே சுமூக உறவு இருக்க விட்டு கொடுத்து செல்வது நல்லது.




வாழ்வில் முன்னேற அக்கறை காட்டுவீர்கள். மனத்துணிவு அதிகரிக்கும். பணவரத்து எதிர்பார்த்தபடி திருப்திகரமாக இருக்கும். மாணவர்களுக்கு சக மாணவர்களின் கருத்துக்களுக்கு மாற்று கருத்துக்களை கூறாமல் அனுசரித்து செல்வது சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தும். கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

**அஸ்வினி:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், பதற்றமும் ஏற்பட்டு நீங்கும். வீண்வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே தேவையில்லாத ஒரு விடயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம். பிள்ளைகளால் திடீர் செலவு உண்டாகலாம்.

**பரணி:** இந்த மாதம் யாரையும் எதிர்த்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வீண் மனக் கவலை, காரிய தாமதம் உண்டாகலாம். பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவி சாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலை தூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும்.

**கார்த்திகை 1 ஆம் பாதம்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். இலாபம் கூடும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரம், தொழில் தொடர்பான கடித போக்கு சாதகமான பலன் தரும். புதிய ஓர்டர்கள் கிடைக்க பெறுவீர்கள். பணியாளர்கள் மூலம் நன்மை உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக எதையும் செய்து முடித்து பாராட்டு பெறுவார்கள்.

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமையில் முருகனுக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து வணங்க எதிர்ப்புகள் விலகும். எல்லா நலன்களும் உண்டாகும்

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வெள்ளி

**அதிஷ்ட தினங்கள்:** 20, 21, 22

**சந்திராஷ்டம தினங்கள்:** 1, 2, 28, 29

## எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்



**கிரகநிலை** - இராசியில் குரு (வ) - தைரிய வீரிய ஸ்தானத்தில் செவ்வாய் - பஞ்சம ஸ்தானத்தில் கேது - களத்திர ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ), சந்திரன் - அஷ்டம ஸ்தானத்தில் சுக்கிரன் - தொழில் ஸ்தானத்தில் சனி - இலாப ஸ்தானத்தில் ராகு என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 03-12-2024 அன்று சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15-12-2024 அன்று சூரியன் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-12-2024 அன்று சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** ரிஷப இராசியினரே... இந்த மாதம் திட்டமிட்டு செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக எதையும் செய்வது நல்லது. எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. அதிக முயற்சி செய்ய வேண்டி இருக்கும். பயணங்கள் ஏற்படலாம். குருவின் பார்வையால் அனைத்து தடைகளும் அகலும்.

தொழில், வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகலாம். பணியாளர்களின் செயல்கள் உங்களுக்கு கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. இலாபம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணிசுமை காரணமாக அதிக நேரம் வேலை பார்க்க வேண்டி இருக்கலாம். நெருப்பு, ஆயுதங்களை பயன்படுத்துபவர்கள் கவனமாக இருப்பது நல்லது.

குடும்பத்தில் மனநிறைவு ஏற்படும் வகையில் எல்லாம் நடக்கும். வாழ்க்கை துணையால் நன்மை உண்டாகும். குழந்தைகளுக்காக பாடுபடுவீர்கள். விருந்தினர் வருகை இருக்கும். உறவினர், நண்பர்களுடன் திடீர் கருத்து வேற்றுமை உண்டாகலாம். நிதானம் தேவை. குழந்தைகளை வெளிநாடு சென்று படிக்க வைக்கும் முயற்சிகள் வெற்றி தரும்.

பெண்களுக்கு உணர்ச்சி வசப்படாமல் எதையும் சிந்தித்து செயற்படுவது நன்மை தரும். கடின முயற்சியின் பேரிலேயே காரியங்கள் வெற்றி பெறும்.

அரசியல்வாதிகள், தாங்கள் சார்ந்துள்ள கட்சியின் தொண்டர்களுக்கும், நெருங்கியவர்களுக்கும் மிகப் பெரிய உதவிகளைச் செய்து பாராட்டுகளைப் பெறுவீர்கள். மேலிடத்திலிருந்து உங்களுக்கு சந்தோஷமான செய்திகள் வந்து சேரும். கலைத்துறையினர் படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். வருமானம் நன்றாக இருப்பதால் இரசிகர்களுக்காகச் செலவு செய்வீர்கள்.




சக கலைஞர்களால் நன்மை அடைவீர்கள். புதிய வாகனங்களை வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண அதிக முயற்சி செய்து பாடங்களை படிக்க வேண்டி இருக்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை.

**கார்த்திகை 2, 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் கணவன் மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

**ரோகிணி:** இந்த மாதம் உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். தொலைதூர தகவல்கள் நல்ல தகவல்களாக வரும். எதிர்பார்த்த பணம் வரும் வாய்ப்பு உள்ளது. திறமை அதிகரிக்கும். உங்களது செயல்களுக்கு பாராட்டு கிடைக்கும். மனதில் தைரியம் கூடும்.

**மிருகசீரிடம் 1, 2 பாதங்கள்:** இந்த மாதம் செல்வசேர்க்கை உண்டாகும். எந்த ஒரு வேலையும் மனதிருப்தியுடன் செய்வீர்கள். புத்தி சாதுரியமும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பண வரவு அதிகரிக்கும்.

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமைகளில் மகாலட்சுமியை தீபம் ஏற்றி வணங்க பொருளாதார சிக்கல் தீரும். பணவரத்து கூடும். மனம் மகிழ்ச்சி உண்டாகும்

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வியாழன்

**அதிஷ்ட தினங்கள்:** 23, 24

**சந்திராஷ்டம தினங்கள்:** 3, 4, 30, 31

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்...

முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய ரூ.311 ஆக இருந்த 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை ரூ.309.00 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

283 ரூபாயாக இருந்த லங்கா சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 03 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 286 ரூபாயாகும்.

மேலும், ரூ.183 ஆக இருந்த மண்ணெண்ணெய் விலை ரூ.188.00 ஆக அதிகரித்துள்ளது.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 371.00 ஆக இருந்ததுடன், எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை. (ம-7)

## விபரீத...

தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த 29 வய்தான இளம் குடும்பப் பெண்ணே மரணமடைந்தவராவார்.

இது தொடர்பில் பொலி ஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## காட்டு யானை...

முன்தினம் இரவு பேருந்தில் முகாமிற்கு திரும்பிய அதிகாரி பேருந்தில் இருந்து இறங்கி முகாமிற்கு சென்றுகொண்டிருந்தபோது யானை தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பூனாவ கடற்படை முகாமில் கடமையாற்றிய மத்தலான, நிட்டம்புவவில் வசிக்கும் கடற்படை வீரரான லெப்டினன்ட் தர அதிகாரியே யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

யானை தாக்கியதில் பலத்த காயம் அடைந்த அவரை, கடற்படையினர் மற்றும் உள்ளூர் மக்களும் இணைந்து வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். பலத்த காயமடைந்த அதிகாரி வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,250)

## குளிருக்காகத்...

கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் முல்லைத்தீவு - சிலாவத்துறை பகுதியைச் சேர்ந்த 75 வயதுடையவராவார்.

உயிரிழந்த முதியவர் தனது மகனின் வீட்டுக்கு அருகிலுள்ள மற்றுமொரு வீட்டில் தனியாக வசித்து வந்தார்.

இந்நிலையில், கடும் மழையினால் ஏற்பட்ட குளிரை எதிர்கொள்ளும் வகையில் வெப்பமூட்டுவதற்காக வீட்டுக்குள் தீயைப் பற்ற வைத்துள்ளார்.

இதன்போது தீ பரவியதால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7)

## விடுதலைப்...

களிடம் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"மரணித்துப்போன பயங்கரவாதிகளுக்கு அநுர அரசு புத்துயிர் கொடுக்கக்கூடாது. பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்தியினருக்கு அதிக ஆசனங்கள் கிடைத்தமைக்காகப் பிரபாகரனின் பிறந்த தினத்தையும், மாவீரர் தினத்தையும் பகிரங்கமாக அனுஷ்டிக்கத் தமிழ் மக்களுக்கு அநுரஅரசு அனுமதி வழங்கியுள்ளது. மரணித்துப்போன பயங்கரவாதிகளை நினைவேந்த அனுமதி வழங்குவதா? தமிழ் மக்களுக்கு நீங்கள் (அநுர அரசு) செய்யும் நன்றிக்கடன்? தெற்கில் உள்ள மக்கள் அநுர அரசின் தான்தோன்றித்தனமான இந்தத் தீர்மானத்துக்கு எதிராகப் போராட முன்வர வேண்டும்" என்றனர். (ம-7)

## 250 ஆண்டுகள்

நவாலி கிழக்கு ஜே/135 கிராம சேவகர் பிரிவில் உள்ள ஞானவைரவர் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள 250 ஆண்டுகள் பழமையான அரசமரமொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வீசிய பலத்த காற்றினால் முறிந்து விழுந்துள்ளது.

இதனால் பைரவர் கோயில் முழுமையாக சேதமடைந்ததுடன் மதிலொன்றும் இடிந்து விழுந்துள்ளது. இருப்பினும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (ம-7)

## கல்லுண்டாயில்...

றிந்து தீர்வு காண்பதற்காக யாழ்ப்பாண மாவட்ட பிரதி அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் நேற்று பல்வேறு நிலையங் களுக்குச் சென்று ஆய்வு செய்தார்.

இதன்போது கல்லுண்டாய் பகுதியில் ஏற்பட்ட வெள்ள நிலைமைகளை ஆய்வு செய்து கல்லுண்டாய் தேசிய இளைஞர் சேவைகள் மன்றக் கட்டடத்தில் தங்கியுள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் குறை நிறைகளைக் கேட்டுக்கொண்டதுடன், உடனடியாக தீர்க்கக் கூடிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் வழங்கினார்.

இதன்போது அனர்த்தத்திற்கு அப்பால் பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட காணிப் பிரச்சினைக்கு, மாகாணக் காணி ஆணையாளருடன்தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடியதன் பின்னர்,

கல்லுண்டாயில் காணிக் கச்சேரி நடத்துவதற்கான நடிவடிக்கைகளை விரைவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர்ஊடாக எடுக்க ஆவன செய்வதாக பொதுமக்களுக்குத் தெரிவித்தார்.

இவ் மக்கள் சந்திப்பில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி சுபாஷினி மதியழகனும் கலந்து கொண்டிருந்தார். ம-7,33)

## உள்ளூ...

பிரேமதாஸ, நாமல் ராஜபக்ஷ, எஸ். சிறீதரன், ரவூப் ஹக்கீம், ரவி கருணாநாயக்க மற்றும் சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன் படி 2022 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கோரப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு விசேட தீர்மானம் ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளது.

இதேவேளை, 2022ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கோரப்பட்ட வேட்புமனுப் பட்டியலில் இடம் பெற்றிருந்த 41 தேசிய மக்கள் சக்தியின் பிரதி நிதிகள் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றுக்கு தெரிவாகியுள்ளனர்.

மேலும், 2022ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்தி வாக்குப்பதிவு நடத்தப்பட்டால், பதிவு செய்யப்பட்ட சுமார் 4 இலட்சம் வாக்காளர்களுக்கு பெரும் அநீதி ஏற்படும் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## மாவீரர்...

நேற்று கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர், மாவீரர் தின நிகழ்வுகளை ஊக்குவித்ததாகக் கூறப்படும் முகப் புத்தகக் கணக்கிற்கு உரித்துடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் 3ஆவதாக கைது செய்யப்பட்டவரும், மாவீரர் தின நிகழ்வுகளை ஊக்குவித்து முகப்புத்தகத்தில் பதிவிட்டதன் காரணமாக கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.11.30
சீட்டிழுப்பு இலக்கம் 5671
F 3 1 5 0 6 8
அத சம்பத F 5 0 6 8
சீட்டிழுப்பு இலக்கம் 246
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.30
சீட்டிழுப்பு இலக்கம் - 1701
A 02 27 72 76 A
Double Chance 57418

மெகா பவர்
திகதி 30/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2019
P 05 10 13 41 58
082904

லக்கி 7 VIP
திகதி 2024.11.30
சீட்டிழுப்பு இலக்கம் 0497
O 2 5 3 7 6 2 O

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3913
சீட்டிழுப்பு திகதி 30.11.2024
H 03 55 56 77
H 155516

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.30
சீட்டிழுப்பு இலக்கம் 0980
சிம்மம் 10 23 25 44 சிம்மம்
039778 31

உத்தியோகபூர்வ முடிவுகள்
30.11.2024 வெற்றி வாரம் 379
G 1 0 2 8 4 8
71129
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,412,754.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2645
சீட்டிழுப்பு திகதி 2024.11.30 தினம் சனிக்கிழமை
03 09 33 38 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,250,081.60
DLB

சனிதா
திகதி 30.11.2024 வெற்றி வாரம் 4806
03 08 33 57 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,832,086.00
ரூ. 100,000/- 60098
DLB

சசிரி
568
30.11.2024 சனிக்கிழமை
22 24 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4357
சீட்டிழுப்பு திகதி 30.11.2024 தினம் சனிக்கிழமை
03 25 46 54 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,484,034.00
102987
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 20 04 54 57 62
1821
30.11.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.556,808,537.20
DLB

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2471
சீ.டிழுப்பு திகதி : 2024.11.30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,487,195.20
ADA KOTIPATHI
16 54 58 59 C
866803
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பிரத்தியேக வகுப்புக்கள்

பொருளியல் - A/L
வணிகக்கல்வி - A/L
குடியியற்கல்வி - O/L

தனியாகவும் குழுவாகவும் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். (2645)

077 900 7597
077 906 4595

## புதிய கல்வியாண்டு - 2025
தரம் 6
## கணிதம்

ஆசிரியர்
திரு.T.அற்புதராஜா
புதிய பிரிவு ஆரம்பம் : வியாழக்கிழமை (05.12.2024) காலை 8.00 மணி
202, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 077 722 2478 (2644)

## மணமகள் தேவை

வடமராட்சி இந்து, 1993, சதயம், விஞ்ஞானப் பட்டதாரி, லண்டன் வேலை விசா (uk, work visa) It, Electronics, Nurse, pharmacist அனுபவமுள்ள ILTES சித்தியுள்ள மணப்பெண். பெற்றோர் தொடர்பு கொள்ளவும். (C-1689)

Whatsapp
077 797 1635

## வீடு வாடகைக்கு தேவை

நல்லூரை அண்டிய பிரதேசத்தில் வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவை. சிறிய குடும்பத்திற்கு இணைந்த குளியலறை வசதியுடன் தனி வீடு. (தரகர் தேவையில்லை. உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.) (2643)

077 663 5469
076 779 4521

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரப் பகுதியில் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து ஏறத்தாழ 100m தொலைவில் 4.5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வர்த்தகர்களுக்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த நிலப்பரப்பாகும். முகவர்கள் தேவையில்லை.
பி.ப 4 மணிக்குப் பின் தொடர்புகளை மேற்கொள்ளலாம்.

075 777 1885 (588)


# உழவு இயந்திர விபத்தில் உயிர் தப்பிய இளைஞன் வெளியிட்ட விபரம்

(அம்பாறை)

அம்பாறை, காரைதீவு பகுதியில் உழவு இயந்திரம் வெள்ள நீரில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், நீரில் மூழ்கி காணாமல்போன மற்றுமொரு பாடசாலை மாணவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடற்படை, பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் நேற்று காலை மாணவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிர் பிழைத்த மாணவர் ஒருவர் விபத்து குறித்து தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

மத்ரசா பாடாசலையிலிருந்து காரைத்தீவுக்கு பஸ்ஸில் வந்தோம். அப்போது மாலை 3.30 மணி இருக்கும். அங்கு இருந்தவர்கள் உழவு இயந்திரத்தை கொண்டு ஆட்களை ஏற்றிச் செல்வதாக தெரிவித்தார்கள். நாங்கள் 11 பேர் உழவு இயந்திரத்தில் ஏறினோம்.

சிறிது தூரம் சென்றதும், வெள்ளப்பெருக்கு காரணமாக டிராக்டரின் முன் சக்கரம் ஒரு பக்கமாக சரிந்தது. உழவு இயந்திரத்தில் இருந்தவர்கள் அனைவரும் நீருக்குள் வீழ்ந்தோம். அப்போது உழவு இயந்திரம் முழுவதுமாக மூழ்கியது.

அந்நேரத்தில் ஒரு அண்ணன் வந்து இரண்டு பேரை இழுத்துக் காப்பாற்றினார். நான் அங்கிருந்து விரைந்து சென்று அருகில் இருந்த மரத்தைப் பிடித்தேன்.

பின்னர் மரத்தில் ஏறினேன். ஒரு படகு அருகில் வந்தது. நான் கத்தினேன், கேட்கவில்லை. மீண்டும் அந்த படகு சென்றுவந்ததை அவதானித்தேன். அப்போது கத்தினேன், அவர்கள் வந்தார்கள்.

நான் படகில் ஏற்றப்பட்டேன். நடந்ததைச் சொன்னதும் அவர்கள் போய்ப் பார்த்தார்கள். அப்போதும் ஒருவர் அடித்துச் செல்வதை அவதானிக்க முடிந்தது. பின்னர் என்னை கரைக்கு அழைத்து வந்தார்கள் எனத் தெரிவித்தார். (ம-7)


## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 236/= Max 5Kg | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg றவை | - 295/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 275/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 385/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 760/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 688/= | |
| 1Kg பயறு | - 582/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 240/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 280/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2800/= | |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 990/= | ~~1050/=~~ |
| 01 ஓசன் மீன்ரின் | - 365/= | ~~500/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 175/= | ~~240/=~~ |
| 500g சொக்லட் கிறீம் பிஸ்கட் | - 480/= | ~~560/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 48/= | ~~50/=~~ |

1Kg சன்லைட் பவுடர்
320/= ~~380/=~~




999/= ~~1050/=~~
400g Anchor



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (590)

Happy Supermarket
0777 8080 30


# ரூ. 40 இலட்சம் பெறுமதியான மஞ்சள் கொழும்பில் மீட்பு

கொழும்பு 15 இல் உள்ள தனியார் களஞ்சியசாலை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 765 கிலோ கிராம் மஞ்சள் நுகர்வோர் விவகார அதிகார சபையின் புலனாய்வு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் தொகையின் பெறு மதி சுமார் 40 இலட்சம் ரூபா என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பற்றுச்சீட்டு இல்லாமல், எந்தத் தகவலும் குறிப்பிடப்படாமல் சந்தையில் விற்பனை செய்வதற்கு தயாராக இருந்த மஞ்சள் தொகையே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த மஞ்சள் தொகை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)


## V2 VISA SERVICES

கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1690)

## வெல்டிங் வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வெல்டிங் கடை ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த வேலையாள் தேவை.
- மதிய உணவு வழங்கப்படும்.
- சம்பளம் :- நாள் ஒன்றிற்கு 4,000/=
- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு : (2641)
077 937 0000, 075 988 1000

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு
- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- இரண்டு ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- இரண்டு பரப்புள்ள துண்டொன்றுக்குள் 6 - 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

ஒரு பரப்பின் விலை
- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- கடற்கரையை (Beach) முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- 20 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம்
  காலை 6 மணி தொடக்கம்
  மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம் (2638)
077 814 7389, 077 986 5457

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
## லைடன் புடவை நிலையம்
யாழ்ப்பாணம்



எதிர்வரும் நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் அனைத்து வகையான துணி வகைகள், ரெடிமேற் ஆடைகள், மகப்பேற்றுத் தாய்மார்கள், குழந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் மாணவர்களுக்கான சீருடைத் துணி வகைகள் போன்ற அனைத்து விதமான பொருட்களையும் 10% விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள்

10%
1.12.2024 - 31.12.2024 (C-1688)

Leyden Textile Center
410, Hospital Road, Jaffna.
021 222 2381

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.